Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை (26.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 026



சூடு பிடிக்கிறது 13 + (05)



அப்ப ஆயுதம் இப்ப விவசாயம் (06)



எங்கும் சாதிப்போம் (09)



இழப்புகள் புதியதல்ல! (13)



பரிதாப முடிவு! (17)

# அவதூறு பரப்பிய 'உதயன்' மீது இராணுவத் தளபதி வழக்கு



(கொழும்பு)

தனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

தனக்கு எதிராக அவதூறு பரப்பும் செய்திகளை வெளியிட்டமையால் தனக்கு ஏற்பட்ட மானநஷ்டத்தைக் கருத்தில் எடுத்து தமக்கு இழப்பீடு வழங்கும்படி கோரியே இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் யாழ்.மேல்நீதிமன்றில் இராணுவத் தளபதி சார்பான சட்டத்தரணி ஒருவர் மேற்படி வழக்கை உத்தியோகபூர்வமாகத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்குத் தொடர்பான தனது பக்க நியாயங்களை வலியுறுத்தும் ஆவணங்கள் பலவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

நான்கு மாதங்களுக்கு முன்னர், உதயன் பத்திரிகை, இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக அவதூறு ஏற்படும் வகையில் செய்தி ஒன்றை பிரசுரித்திருந்ததாகவும் அதன்பின்னரும், அந்த பத்திரிகை இராணுவத் தளபதிக்கு அவ்வாறான செய்தி ஒன்றை பிரசுரித்ததாகவும் குற்றம் சுமத்தி ஜகத் ஜயசூரிய இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

## முடங்கியது மருத்துவ சேவை

சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்றுப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

காலை 8.00 மணிக்கு ஆரம்பமான பணிப் பகிஷ்கரிப்பு 24 மணி நேரம் நீடிக்கும் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் அரச மருத்துவ சங்கத்தினர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழில் வீதி புனரமைப்பு மேலும் வேகமடையும்

### மேலதிக உதவிக்கு சீனா வாக்குறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மேலும் 220 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் யூஜியாங்கோ யாழ். அரச அதிபரிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த சீனத்தூதுவர் முற்பகல் 11.30 மணிக்கு யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்து யாழ்.மாவட்டத்தில் சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போதே யாழ்.மாவட்டத்தில் மேலும் 220 கிலோ மீற்றர் வீதியினை சீன அரசாங்கம் புனரமைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஏ-9 வீதி, யாழ்-காங்கேசன்துறை வீதி, யாழ்-பருத்தித்துறை வீதி, புத்தூர் - மீசாலை வீதி என்பன 25 ஆயிரத்து 250 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் ஏ-9 வீதிப் புனரமைப்பில் சற்றுத்தளர்வு நிலை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இந்த வீதியின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துமாறும் சீனத் தூதரைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் சீன அரசாங்கம் யாழ். மாவட்டத்தில் புனரமைக்கப்படாதுள்ள உள்ளூர் வீதிகளை

(19) ஆம் பக்கம் பார்க்க

# தீர்வு தாமதமடைவதற்கு கூட்டமைப்பே காரணம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் அந்தப் பிரச்சினை நீடித்துச் செல்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே காரணம் என்று தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முற்பகல் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் தொடர்ந்தும் பதிலளிக்கையில், தேசிய பிரச்சி

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டனுக்கான விசா புதிய நடைமுறை அறிமுகம்

பிரிட்டனுக்கான கொழும்பில் கையளிக்கப்படும் விசா விண்ணப்பங்களை சென்னையில் உள்ள பிரித்தானிய பிரதி உயர்ஸ்தானிகராலயத்தில் உள்ள ஐக்கிய இராச்சிய எல்லை முகவரகம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முதல் கையாளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண சபை தேர்தலை தவிர்க்க அரசு முயற்சிக்கிறதா?

(கொழும்பு)

வடக்கில் மாகாண சபைத் தேர்தலைத் தவிர்த்துக் கொள்ள அரசு முயற்சிக்கிறதா என்று சந்தேகம் கிளப்புகிறது ஐக்கிய தேசியக் கட்சி.

வட மாகாண சபைத் தேர்தலில் தன்னால் வெல்ல முடியாது என்பதை நன்கு தெரிந்துகொண்ட அரசாங்கம் வடக்கில் தேர்தல் நடத்துவதை தவிர்ப்பதற்காக 13 ஆம் திருத்தத்தை இரத்துச்செய்ய தீர்மானித்துள்ளது என எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

வடமாகாண மக்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் தவிர்க்க விரும்புகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உதவி தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்கு போயுள்ளதாலும் யுத்தம் முடிந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net



வாழ்வில் வளம் சேர்க்க 'திவிநெகும' யாழில் ஆரம்பம்

# வாழ்வின் எழுச்சியுடன் இணையுங்கள்

## நெடுந்தீவில் 'திவிநெகும' அமுலாகிறது



"செழிப்பானதொரு வீட்டுத் தோட்டத்தின் உரிமையாளராகுங்கள் வாழ்வின் எழுச்சியுடன் நீங்களும் சேருங்கள்" என்ற தொனிப்பொருளில் மகிந்தசிந்தனையின் வாழ்வின் எழுச்சி வீட்டுத்தோட்டச் செய்கையின் நான்காம் கட்ட விதைகள் மற்றும் பயிர்கள் பயிரிடும் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 10.11 மணிக்கு நெடுந்தீவின் ஆறு கிராம அலுவலர் பிரிவிலும் இடம்பெற்றது இந்நிகழ்வுகளில் பிரதேச சபை தவிசாளர் தானியேல் றெக்சியன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், மத்குருமார், பிரதேச செயலக ஆளணி உதவியாளர், மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுனர் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வீட்டுத் தோட்ட பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். இநநிகழ்வு 03 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கில் கந்தையா தர்மலிங்கம், 04 ஆம் வட்டாரம், நெடுந்தீவு தெற்கில் கணவதிப்பிள்ளை சத்தியகுமாரன், 06 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி மேற்கில் அலெஸ்பிரான்சிஸ் சேவியர், 09 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தியில் அம்புறோஸ் ஆரோக்கியதாஸ், 12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி கிழக்கில் சுப்பிரமணியம் சச்சிதானந்தம், 13 ஆம் வட்டாரம், நெடுநதீவு கிழக்கில் சந்தியாப்பிள்ளை லோப்பையா ஆகிய பயனாளிகளின வீட்டுத் தோட்டங்களில் இந நிகழ்வுகள் இடம்பெற்றது.

## ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு

பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக் கோவையும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை இலங்கை பத்திரிகை முறைப்பாடு ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

இக்கலந்துரையாடல் வரும் நவம்பர் மர்தம் 03 திகதி காலை 9.00 மணி முதல் 1.00 மணிவரை யாழ்ப்பாணம் ஞானம் ஹோட்டலில் நடைபெறும். அந்தச் சந்தர்ப்பத்தில் பொறுப்புணர்வுடன் கூடிய ஊடக பயன்பாடு" என்ற தலைப்பில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் அறிக்கையிடலின் போது ஏற்படுகின்ற பிரச்சினை மற்றும் ஊடக ஒழுக்கக் கோவை, இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவுக்கும் ஊடகவியலாளர்களுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப் படவிருக்கின்றது.

இக் கலந்துரையாடலுக்கு இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதிநிதிகளும் சமூகமளிக்கவுள்ளனர்.

## தண்டம் விதிப்பு

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தவர்களுக்கு நீதிமன்றம் தண்டப்பணம் விதித்துள்ளது. புங்குடுதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் சட்டவிரோதமாக அரச அனுமதிபெற்ற சாராயம் விற்பனை செய்த இரண்டு நபர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன். சட்டவிரோதமாக கள் வைததிருந்த ஆறு பேருக்கு தலா ஆயிரத்து ஐந்நூறு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கடந்த 22 ஆம் திகதி நடத்திய திடீர் தேடுதலின்போதே இவைகள் கண்டுபிடிக்கப்பட்டு மறுநாள் 23 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கினை விசாரணை செய்த நீதிபதி மேற்படி தீர்ப்பினை வழங்கினார். (54)

## கிளிநொச்சி தபாலகம் விரைவில் திறக்கப்படும்

கிளிநொச்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஐம்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் புதிதாக அமைக்கப்பட்ட தபாலக கட்டடம் விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இரண்டு மாடிக் கட்டடமாக ஏ-9 பிரதான வீதியில கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் மூலம் கிளிநொச்சி தபால்த்துறை மிக நீண்ட காலமாக எதிர்நோக்கி வந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைததுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதான தபாலகங்களும் 37 உப தபாலகங்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

(காரைநகர்)

காரைநகர் ஊரி என்ற இடத்தில் சிறுவன் ஒருவன் கிணற்றில் தவறி விழுந்து மரணமடைந்துள்ளார். பிரபாகரன் சயந்தன் (வயது - 6) என்ற முதலாம் தர மாணவனே மரணமடைந்துள்ளார். போயில் வீதியில் புதிதாக வெட்டப்பட்ட கிணற்றில் தவறி வீழ்ந்தே மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. (50)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 31.03.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் - **08.12.2012, 09.12.2012, 15.12.2012, 16.12.2012** ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2080)


## கண்ணாடியை உடைத்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(அல்வாய்)

அல்வாய் வடக்கில் 20 வயது இளைஞர் ஒருவர் சினிமா பாணியில் ஜன்னல் கண்ணாடியை உடைத்து கையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாரிவண்ணன் சுதர்சன் (வயது-20) என்பவரே வீட்டில் சகோதரியுடன் சண்டையிலீடுபட்டு சினிமா பாணியில் வீட்டுக் கண்ணாடியை உடைத்துள்ளார். (116)


## பனையிலிருந்து வீழ்ந்து தொழிலாளி மரணம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் பனையில் இருந்து வீழ்ந்து தொழிலாளி ஒருவர் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

நீக்கிலாஸ் சந்தியா - குறூஸ் (வயது - 60), 6 ஆம் வட்டாரம் நெடுந்தீவு என்பவரே மரணமடைந்துள்ளார். இவர் அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியாசலைக்கு எடுத்து வரப்படும் வழியில் மரணமடைந்துள்ளார்.

## அல்வாயில் கொள்ளை



அல்வாய் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 12.00 மணியளவில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 20 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இத் திருட்டுத் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(116)

# வீட்டுத்தோட்டச் செய்கை மனைப் பொருளாதாரத்தை உயர்த்தும்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர்

(கொழும்பு)

இயற்கையான முறையில் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு நஞ்சுகள் கலக்காத உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து பயன்படுத்தும் மக்களாகவும் நாம் இருக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

திவிநெகும – வாழ்வின் எழுச்சி நான்காம் கட்ட நிகழ்வின் கிளிநொச்சி மாவட்ட ரீதியான நிகழ்வு நேற்று கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் முகாவில் கிராமத்தில இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

இந்த செயற்றிட்டத்தின் மூலம் வளமான ஒரு வீட்டுத் தோட்டத்தினை உருவாக்கி உயர்ந்த பயன் பெற்று மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்பதோடு அரசின் இந்த திட்டத்தின் மூலம் அதன் உச்ச பயனை பெற்றுக்கொள்வது மக்களின் பொறுப்பு என்றார்.

காலை 10.11 மணிக்கு முகாவில் பாலசுப்பிரமணியம் சௌந்தரராஜனியின் வீட்டுத் தோட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். செழிப்பானதொரு வீட்டுத் தோடடத்திற்கு உரிமையாளராகுங்கள் என்ற வாசகத்துடன் குடும்பப் பொருளாதாரத்தையும் போசாக்கையும் மேம்படுத்தும் ஐம்பது இலட்சம் மனைப்பொருளாதார அலகுகளை விருத்தி செய்யும் தேசிய செயற்றிட்டத்தின் நான்காம் கட்ட நிகழ்வின்பேது அப்பிரதேசத்தை சேர்ந்த பல பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சிர்னிவர்சன், மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் மோகனபவன், பிரதித் திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தயாரூபன், மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் செல்வராசா, நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார், இணைப்புச் செயலாளர் இராஜேந்திரன் மற்றும் கிராம அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

# ஹஜ்பெருநாள் தினம் விசேட தொழுகை

(யாழ்ப்பாணம்)

'ஈதுல் அல்ஹா' ஹஜ் பெருநாள் தினம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் அதிகாலை வேளையில் நடைபெறும் ஜும்மா பிரசங்கமும், பெருநாள் தொழுகையும் இரண்டு பள்ளி வாசல்களிலும் இடம்பெறுகின்றன.

ஆண்களுக்கு பெரிய பள்ளி வாசலிலும், பெண்களுக்கு மஸ்ஜித் முஹம்மதியா (புதுப்பள்ளி)யிலும் நடத்த யாழ்.உலமா சபையினர் தீர்மானித்துள்ளனர்.

தற்போதைய காலநிலைமைகளைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதே வழி முறை சென்ற வருடமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெருநாள் தொழுகை முடிந்த நேரத்திலிருந்து 3 தினங்கள் உள்ஹிய்யா குர்பான் கொடுக்க முடியும். ஆனால் போயா தினத்தில் குர்பான் நிகழ்வை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (105)

# அடிப்படை வசதியின்றி வாழும் மந்துவில் கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மந்துவில் கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி தற்போது பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

செட்டிகுளம் நலன்புரி முகாமிலிருந்து 300 குடும்பங்கள், உறவினர் நண்பர்கள் வீடுகளில் வசித்து வந்த 300 குடும்பங்களுமாக 600 குடும்பங்கள் இக்கிராமத்தில் மீள்குடியேறி வசித்து வரும் நிலையில், மீள்குடியேறி ஒரு மாதமாகியும் இதுவரை அடிப்படை வசதிகள் எவையும் சீர்செய்யப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுவரை முகாமிலிருந்து மீள்குடியேறிய 300 குடும்பங்களுக்கு யு.என்.ஏச்.சி.ஆர் நிறுவனத்தால் 20 ஆயிரம் ரூபாவும், டி.ஆர்.வி. நிறுவனத்தால் தற்காலிக இருப்பிடத்திற்கான தடி, தறப்பாள் என்பன வழங்கப்பட்டுள்ளதாகவும் மற்றைய குடும்பங்களுக்கு எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை மலசல கூடங்களும், கிணறுகளும் யுத்த அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்துள்ளமையால் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் மலசல கூடவசதிகள் இன்றியும் குடிநீருக்காக நாம் பல்வேறு நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றோம். தறபோது 10 கிணறுகள் சேவாலங்கா நிறுவனத்தால் துப்புரவாக் கப்பட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில் 32 கிணறுகள் சுத்திகரிக்கப்படாது உள்ளன.

இதனால் குடிநீர்த் தேவைக்காகவும் ஏனைய தண்ணீர்த் தேவைக்காகவும் நாம் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


தற்போது மழைக் காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அத்தியாவசிய தேவையாகவுள்ள மலசலகூட வசதி, குடிநீர், தற்காலிக வீட்டு வசதி என்பனவற்றை ஏற்படுத்தித்தர உரிய அதிகாரிகள் கவனம் எடுத்துச் செயற்படுமாறு இக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## சிறந்த இலக்கிய நூல்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தினால் 2010/2011 ஆம் ஆண்டுக்கான சிறந்த இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.குகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அருட்சகோதரி ம.சயந்தி ஆகியோர் வழங்கவுள்ளனர். வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைப்பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கவுள்ளார்.



செலான் வங்கி நெல்லியடிக் கிளையில் டிக்கிரி பிளஸ் சிறுவர் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்த சிறுவர்களுக்கான சீட்டிழுப்பு அண்மையில் இடம்பெற்றது.

சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற செல்வன் நி.செரோனுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. சிறுவனின் தந்தையிடம் வங்கியாளர் துவிச்சக்கர வண்டியைக் கையளிப்பதனைக் காணலாம்.

# புகைப்பொருள் எதிர்ப்பு தினம்; கட்டுரைப் போட்டி முடிவுகள்

தொடர்ச்சி....

(யாழ்ப்பாணம்)

புகைப்பொருள் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பாடசாலை மாணவர்களிடையேயும் திறந்த பிரிவாகவும் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுரை

நே.சிந்துஜா யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை, ஈ.பவித்திரா யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ம.தர்மினி யா/இந்து மகளிர் கல்லாரி, சி.சுகந்தனா யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, வி.ஜெயப்பிரகாஷ் யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம், நா.நர்மதா யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், க.ஜெனனிகா யா/அத்தியார் இந்துக் கல்லூரி, ஜெ.ஜெயஅர்ச்சனா யா/உடுத்துறை மகா வித்தியாலயம், சி.கோகுலவர்த்தனி யா/இணுவில் மத்திய கல்லூரி, இ.மதுஷாளினி யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம், ந.சுபாஜினி யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யோ.துயித்திரா யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம், தே.நிரூசா யா/கரணவாய் மகா வித்தியாலயம், ப.வயோர்தன் யா/மத்திய கல்லாரி யாழ்ப்பாணம், ம.கம்ஷன் யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம், பு.அஜிந்தா யா/கம்பர் மலை வித்தியாலயம், செ.நிறோஜினி யா/நவாலி மகா வித்தியாலயம், யோ.கேசினி யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இ.மிதுனா யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ஜ.சோபிகா யா/சன்மார்க்க மகா வித்தியாலயம், த.இந்துஜா யா/புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி, வி.வினோதினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ம.பேபிசாளினி யா/கரணவாய் மகா வித்தியாலயம், அ.கிருஷாந்தி யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம். (தொடரும்.....)

## வழிகாட்டல் கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கரைத்துறைப்பற்று கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வித்தியானந்தா கல்லூரியிலும், புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு விசுவமடு மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் மா.இராஜ்குமார் அறிவித்துள்ளார். (04)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஐப்பசி மாத மலர் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை சி.பத்மநாதன், மதிப்பீட்டுரையை சமய ஆசிரியர் சைவப்புலவர் க.நித்தியதசீதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# பிள்ளை நேயப்பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்து ஆய்வு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பிள்ளை நேய பாடசாலைகளின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் யாழ்.பொது நூலகத்திலுள்ள வட மாகாண கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

வட மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில். பேராசிரியர எமிறிட்டஸ் (கல்வி ஆராச்சியாளர்), யுனிசெவ் நிறுவனத்தினைச் சேரந்த அஞ்ஜெலா டபிள்யூ.லிட்டில், ஒஸ்எயிட் நிறுவன பிரதிநிதியும் அவுஸ்ரேலிய தூதுதரக இரண்டாம் செயலாளருமான ஜெனில்லீ டென்ரன், ஆலோசகர் முத்து சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் பிள்ளை நேய பாடசாலைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

வடமாகாண கல்வித் திணைகளத்தினைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் பங்குபற்றியிருந்தார்கள்.

# கேதார கௌரி விரதம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் நவராத்திரி பூசையின் இறுதிநாளான விஜயதசமி பூஜை நிறைவு பெற்று கேதார கௌரி விரதத்துக்கான பூஜைகள் ஆரம்பமாகியுள்ளன.

தொடர்ந்து இருபது நாட்கள் இவ்வாலயத்தில் பிரதான கும்பத்துக்கு தண்ணீரும் பூவும் போடுதல் நிகழ்வு இடம்பெற்று, எதிர்வரும் 13 ஆம் திகதி அமாவாசை தினத்தில் விரதம் நோற்கும் அடியவர்களுக்கு காப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெறுமென ஆலய பிரதம குரு சசாங்கக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புதுக்குடியிருப்பு சிவன் கோயில் மற்றும் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்திலும் கேதார கௌரி விரதத்துக்கான பூஜைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (138)

அறியாமையுடன் ஒருவன் நூறு ஆண்டு வாழ்வதை விட, அறிவுடன் ஒரு நாள் வாழும் வாழ்க்கையே மேலானது. - புத்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## புறமுதுகு காட்டியபடி பேசும் வீரம்!

ஏகோபித்து வாக்குகளைப் போட்டு தமிழ் மக்களின் தலைமையாக எங்களை அனுப்பி வையுங்கள் என்று கேட்டு வாக்குகளைக் கவர்ந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் அளித்த நம்பிக்கைக்குப் பாதகமாகவே தொடர்ந்து நடந்துகொண்டது இப்போது தெளிவாக அம்பலப்பட்டுப் போயிருக்கிறது.

13-வது திருத்த அரசியல் சட்டத்தையும் காப்பாற்றிக்கொள்ள எங்களால் முடியாது, சர்வதேசமும் இந்தியாவும் ஏதாவது செய்தால்தான் உண்டு என்று கைவிரிப்பதோடு தாங்கள் மெல்லக் கழன்றுவிடலாம் என நினைக்கிறார்கள். இதற்காகவா தமிழ் மக்களின் தலைமைப் பதவி கேட்டு இத்தனை காலம் தமிழ் மக்களை ஏமாற்றி வந்தார்கள்?

நாம் திரும்பத் திரும்பப் பலமுறை சொல்லிவந்தோம். இவர்களது வெத்துவேட்டான எதிர்ப்பரசியலை சிங்களப் பேரினவாதிகள் மிக வாஞ்சையோடு தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை, இவர்கள் தங்களை நம்பிய மக்களது நலன் சார்ந்த அக்கறைகொண்டு தங்கள் மண்டையில் ஏற்றிக்கொள்ளவே இல்லை. வெற்றுக் கோஷங்களை எழுப்பியபடி தங்கள் பதவிகளை மட்டுமே பத்திரமாகப் பாதுகாத்து வந்தார்கள்.

நியாயமான பேச்சின் மூலம் எடுத்திருக்கக் கூடிய தீர்வுகளை எல்லாம் விதண்டாவாதம் பேசி இவர்கள் குழப்பியே வந்தார்கள். வடக்கு கிழக்கு இயைந்த சமஷ்டிக்கு நெருக்கமான சந்திரிகாவின் தீர்வைக் குழப்பிவிட்டு வந்து வெறும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு கோஷம் போட்டு வாக்குகளைக் கேட்பார்கள். இதன்மூலம் வடக்கு கிழக்கு இணைப்புக்கும் எதிரான தீவிர உணர்வுகளை சிங்கள தேசியவாதிகள் மத்தியில் எழுப்பிவிட்டு, இவர்களும் அதைக் கைவிடுவார்கள். வடக்கு கிழக்கில் தனித் தனியாகவேனும் கதிரைகளைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கிவிடுவார்கள்.

பிறகு, இவர்கள் கல்லாப்பெட்டி சிங்காரம் ஒரு படத்தில் வீரம் பேசியதுபோல, மற்றதெல்லாம் பரவாயில்லை, ஆனால் 13-வது திருத்தத்தில் கைவைத்தால் தெரியும் சங்கதி என்று சிங்களப் பேரினவாதிகளைச் சும்மா உசுப்பேற்றுவார்கள். அவர்களும் இதற்காகவே காத்திருந்தது போல 13-வது திருத்தத்தை உடனடியாக நீக்கிவிட வேண்டும் என்பதில் வந்துநிற்பார்கள்.

இவர்கள் கைகளை மேலே தூக்கி, 13-வது திருத்தமும் போகுதே, சர்வதேசமும் இந்தியாவும் பார்த்துக்கொண்டுதான் இருக்கப்போகிறதா என்று வீரத்தை ஒப்பாரியாக மாற்றுவார்கள். சர்வதேசமும் இந்தியாவும் என்னதான் சொல்லப் போகின்றன? தங்களது சொல்லுக்கு இலங்கை அரசு மதிப்பளிப்பதாகக் காட்டிக்கொள்கிறதா, அது போதும் அவர்களுக்கு. 13-வதில் குறைக்க வேண்டியதைக் குறைத்துவிட்டு 19-வது திருத்தமென்றாலும் முதலில் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கொடுத்ததாகக் காட்டுங்கள் என்பார்கள்.

கூட்டமைப்பினரோ சர்வதேசம் சொல்வது காதில் விழாதது போலவே, பழசெல்லாவற்றையும் எங்கோ விட்டுவிட்டு, 13-வது இல்லாவிட்டால் அவ்வளவுதான், எமது இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை யோசிக்க வேண்டிவரும் என்று வழக்கம்போலப் பூச்சாண்டியை எடுத்து விடுவார்கள். அதற்காகவே காத்திருந்த சிங்களப் பேரினவாதிகள், 19-வது திருத்தமும் நாட்டுக்கு எதிரானது நீக்க வேண்டும் என்று தொடங்குவார்கள்.

தமிழ்த்தலைமை என்று சொல்லப்படுகிற இவர்கள் அடுத்தபடியில் இறங்கிப்போய் நின்று, 19-வது திருத்தம் மட்டும் இல்லாவிட்டால் தமிழ்ப்பகுதிகளில் எரிமலை வெடிக்கும் என்று வீரத்தை வெளிப்படுத்துவார்கள்.

நமது மக்களுக்குத் தேவையானதைப் பேசவோ எடுக்கவோ கூடிய ஒரு தலைமையே தமிழ்த் தலைமை என்றாக வேண்டும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டியதே அவசரத்தேவை.

- ஆசிரியர்

# புல்லுமலையில் இன நல்லுறவுக்கான வீதி அமெரிக்கத் தூதுவரால் திறப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புல்லுமலையில் அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட இன நல்லுறவுக்கான கூட்டிணைவு வீதியை இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் திறந்து வைத்தார்.

மட்டக்களப்பிற்கான இரண்டு நாள் விஜயத்தினை மேற்கொண்டு வருகைதந்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிஸன், நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு மட்டக்களப்பின் மீள்குடியேற்ற எல்லைக் கிராமமான புல்லுமலைக்கு விஜயம் செய்ததுடன், அங்கு அமெரிக்க நிதியுதவியில் யு.எஸ்.எயிட். நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட புல்லுமலைக்கும் மங்களகமைக்கும் இடையிலான தமிழ்-சிங்கள இன நல்லுறவுக்கான வீதியைத் திறந்துவைத்தார்.

சுமார் ஏழு கிலோமீற்றர் தூரத்தினைக் கொண்ட இவ் வீதியானது கடந்த முப்பது வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக புல்லுமலை, மங்களகம கிராமங்களில் வசித்து வந்த தமிழ்-சிங்கள மக்களுக்கு இடையிலான கசப்புணர்வைப் போக்கி இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் நோக்குடன் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிஸன்,

யுத்தம் நடைபெற்ற காலத்தில் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையில் ஏற்பட்ட கசப்புணர்வுகளை இரண்டு இன மக்களும் மறந்து எல்லா மக்களும் ஒருங்கிணைந்து செயற்படுவதை இங்கு நடைபெற்ற நிகழ்வுகளின் ஊடாக தான் அவதானித்ததாகவும் இங்கு நடைபெற்ற தமிழ் - சிங்கள் மக்களின் இன நல்லுறவை ஏற்படுத்தும் நாடகமும், இங்கு திறந்துவைக்கப்பட்ட சுவர் ஓவியமும், இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் நோக்குடன் திறந்துவைக்கப்பட்ட வீதியும் என மூன்று விடயங்களும் தன்னைக் கவர்ந்துள்ளதாகவும் இதற்காக உழை[illegible] அனைவருக்கும் தான் நன்றிகளைத் தெரிவித்து கொள்வதாகவும் அவர் கூறினார்.

# ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் பணிப்பெண்கள் இருவர் பலி

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் உள்ள விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்தில் விழுந்த 3 வயதுக் குழந்தை ஒன்றைக் காப்பாற்ற முற்பட்ட இரண்டு இலங்கைப் பணிப்பெண்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புஜய்ரா - டிப்பா பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த குழந்தை தவ்றி நீச்சல் தடாகத்தில் விழும் போது, விடுதியின் பாதுகாப்பு அதிகாரிகள் பக்கத்தில் இருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இலங்கை பெண்கள் இருவரும் தடாகத்தில் குதித்து, குழந்தையைக் காப்பாற்ற முற்பட்டுள்ளனர். எனினும் குழந்தை மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் பெண்கள் இருவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் விடுதியின் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# காத்தான் குடியில் "திவிநெகும" 4ஆம் கட்டம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும 4 ஆம் கட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் மரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 345 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நேற்று இடம்பெற்றன.

இதன் ஒரு அங்கமாக காத்தான்குடி பிரதேச செயலக ரீதியான பிரதான வைபவம் புதிய காத்தான்குடியில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலர் எஸ்.எச். முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

"நிறைவான இல்லம் வளமான தாயகம்" எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் மரக்கன்றுகள் நாட்டியதுடன் தென்னை மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை, ஆரையம்பதி பிரதேச செயலகத்தின் பிரதான வைபவம் காங்கேயனோடையில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் வாசுகி அருள்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரையம்பதி பிரதேச சபை தலைவர் கிருஷ்டினா உட்பட ப[illegible] கலந்துகொண்டனர். இதன்போது, மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டதுடன் மர நடுகையும் இடம்பெற்றது.

# கைகழுவும் முறைகள் மாணவர்களுக்கு விளக்கம்

(சிகரம்)

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் அண்மையில் உலக கை கழுவுதல் தினம் கொண்டாடப்பட்டது.

ஒக்ரோபர் - 15 சர்வதேச ரீதியாக உலக கை கழுவுதல் தினமாக கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகும். இத்தினமானது பாடசாலைகளில் மாணவர்களின் உடற்சுகாதாரத்தினை மேம்படுத்தும் முக்கிய செயற்திட்டங்களில் ஒன்றாகக், காணப்படுகின்றது.

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் யோ.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மறவன்புலோவிற்கான பொதுச் சுகாதார பரிசோதகர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கை கழுவும் முறைகள் பற்றியும், அதன் அவசியம் பற்றியும் விளக்கியதுடன்,கை கழுவாததினால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான சுகாதாரக் கருத்துரைகளையும் வழங்கினார்.

அத்துடன் கை கழுவும் முறைகள் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகரால் செய்முறை ரீதியான நேரடியான விளக்கம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்களுடன் மறவன்புலோ சின்னத்தம்பி முன்பள்ளி மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# சிகிச்சை முறைகளை மேம்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

வயோதிப நோயாளர்களுக்கான சிகிச்சை முறைகளை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய சனத்தொகையில் 8 - 10 வீதமானவர்கள் வயோதிபர்கள். 2025ஆம் ஆண்டளவில் இந்த வீதம் 22 ஆக உயர்வடையும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்காசியாவிலேயே அதிக முதியவர்களைக் கொண்டுள்ள நாடு இலங்கை ஆகும். நாட்டில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் இதற்கான காரணம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் முதியவர் சனத்தொகைக்கு ஏற்ப அவர்களுக்கான விசேட சுகாதார சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி முதியவர்களுக்காக தனிப்பட்ட வைத்தியசாலைகளை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு எதிர்பார்த்துள்ளது.

# சூடு பிடிக்கும் 13+ விவகாரம்

**13ஆம் அரசியல் திருத்தத்தை அரசாங்கம் அகற்ற நினைத்தால் இலங்கை இந்திய உறவு உடையும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள சுரேஸ் பிறேமச்சந்திரன் இலங்கை இந்திய உறவை இதுவரை காலமும் தானே சீர்படுத்தி வந்தவர்போல வெளியிட்டுள்ள அறிக்கையானது நகைப்பிற்கு இடமானது.**

**- வே.அர்ச்சுணன்**

இலங்கை அரசியலில் பல்வேறு நாடுகளும் தமது கவனத்தை திசைதிருப்பியுள்ள போதும் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு என்பது இழுபட்டுச் செல்வதற்கு தனியே சிங்கள அரசியல் வாதிகளை மட்டும் குறைகூறிவிட முடியாது. ஏனெனில் சிங்கள தேசியம் தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வை வழங்குவதற்குரிய காலம் கனிவதற்கு தமிழர் தரப்பும் சில விட்டுக் கொடுப்புகளை செய்ய வேண்டும். அத்தோடு சிங்கள மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்வதுடன் தமிழர் தரப்பிற்கு ஏன் அரசியல் தீர்வு தேவை என்ற விவகாரம் தொடர்பிலும் அவர்களிடத்தில் தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்துவது அவசியமாகும்.

ஏனெனில் சாதாரண சிங்கள மக்களிடத்தில் தெளிவு பிறக்காத வரை ஆட்சியாளர்கள் தாம் நினைத்தவாறு அரசியல் தீர்வை வழங்கமுடியாதவர்களாகவே இருக்கப்போகிறார்கள். இதற்கு தமிழர் தரப்பாகிய நாமும் பொறுப்பாளிகள் ஆகிவிடுவோம். வெறுமனே சிங்கள தேசியம் மீதும், சிங்கள . அரசியல் வாதிகள் மீதும் பழிகளைப் போட்டுவிட்டு நாங்கள் தப்பித்துவிட் முடியாது. இனப்பிரச்சினை தொடர்பிலான அரசியல் தீர்வு விடயத்தில் சிங்கள முற்போக்கு அரசியல் வாதிகளும், சிங்கள மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்திற்கு தம்மை தயார்படுத்த வேண்டும். இதனை விடுத்து எமது தமிழ் அரசியல் வாதிகள் அமெரிக்கா இந்தியாவென சுற்றுலாக்களை மேற்கொள்வதன் ஊடாக அரசியல் தீர்வை எட்டி விட முடியாது.

அரசாங்கம் தெரிவுக்குழுவில் இணையுமாறு அழைப்பு விடுக்கும் போதெல்லாம் கூட்டமைப்பு அதைப் புறந்தள்ளியே வந்துள்ளது. தற்போது 13+ அடிப்படையில் தீர்வு கூட்டப்படும்.... இதற்கு இந்தியா உதவும்.... இதையே இந்தியா எம்மிடம் கூறியது என கூட்டமைப்பினர் அறிக்கை வெளியிட்டுள்ள போதிலும் 13+ என்ற அணுகுமுறை ஊடாக ஒரு. தீர்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை் அரசாங்கத்துடன் இந்தியா எவ்வாறு இணைந்து செயற்படுகிறது என்பது தொடர்பாக தமிழ் அரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டதாக இந்திய அரசியல் உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி அண்மையில் "த ஹிந்து" பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. உண்மையில் 13+ அடிப்படையிலேயே தீர்வு அமையவேண்டுமென்பதே இந்தியத் தரப்பு தமிழ் அரசுக்கட்சியினருக்கு எடுத்துச் சொல்லியிருந்தது.

**தமிழர் தரப்பும் சில விட்டுக் கொடுப்புகளை செய்யவேண்டும். அத்தோடு சிங்கள மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்வதுடன் தமிழர் தரப்பிற்கு ஏன் அரசியல் தீர்வு தேவை என்ற விவகாரம் தொடர்பிலும் அவர்களிடத்தில் தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்துவது அவசியமாகும். வெறுமனே சிங்கள தேசியம் மீதும், சிங்கள அரசியல் வாதிகள் மீதும் பழிகளைப் போட்டுவிட்டு நாங்கள் தப்பித்துவிட முடியாது.**

இந்த நிலையில் இவ் விவகாரம் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் விவகாரமாக மாற்றம் அடைந்துள்ளது. குறிப்பாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ 13+ ஐ அகற்றவேண்டுமென கூறியுள்ளார். இருந்தபோதிலும் தமிழர்களுக்குரிய தீர்வு விவகாரத்தில் தமது அரசு காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் எனவும் இவர் கூறியுள்ளார். இந்த நிலையில் சிங்கள பேரினவாதக் கட்சிகள் தற்போது அனல் பறக்கும் விதத்தில் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. 'விமல்வீரவன்ச கருத்துக்கணிப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென கடிதம் எழுதியுள்ளார். இலங்கையைப் பொறுத்த வரையில் கருத்துக் கணிப்பு என்று ஒன்று மேற்கொள்ளப்பட்டால் அது தமிழர் தரப்பிற்கு சாதகமாக அமைவதற்கான சூழல் இல்லையென்றே அடித்துக் கூறலாம். ஏனெனில் தமிழர் தரப்பு தமது பிரச்சினைகளை சாதாரண தர சிங்கள மக்களிடத்தில் தெளிவுபடுத்தாமையும் ஒரு காரணமாகும்.

எனவே அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டுமாயின் அது தொடர்பாக மக்களின் அபிப்பிராயத்தை அறிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை அடிப்படையாக வைத்து, நாடு அரசியல் அழிவை நோக்கி செல்வதாகவும் எனவே அத்திருத்தத்தை முற்றாக அகற்றுவது குறித்து முடிவு செய்ய முன்னர் மக்களின் கருத்தை அறியவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சிங்கள அரசியல் வாதிகளில் முற்போக்குச் சிந்தனையுடையோர் 13+ திருத்தத்தை அகற்றக்கூடாது என வாதிட்டு வருவதுடன் இதற்குரிய நியாயப்பாடுகள் தொடர்பில் அரச உயர் மட்டத்துடன் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இவ் விடயத்தில் அமைச்சர் டியூ குணசேகர முதன்மையானவராகச் செயற்பட்டு வருவதுடன் 13+ இன் தேவை பற்றி பின்வருமாறு வலியுறுத்தியும் வருகின்றார். அதாவது 13+ திருத்தச் சட்ட அமுலாக்கமே விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்கள், ஆயுதங்களைக் களைய வழிகோலியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜனாதிபதி விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.எனினும் 13ஆம் திருத்தச்சட்ட மூலத்தை இரத்துச் செய்வதன் மூலம் மீண்டும் தமிழ்ப் பிரிவினைவாதம் தலைதூக்கக் கூடிய அபாயம் நிலவுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.




அண்மையில் 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் வெளியிட்ட கருத்து ஏற்புடையதல்ல என டியூ குணசேகர குறிப்பிட்டுள்ளார். 13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் அளவிற்கு அரசாங்கம் தேவையற்ற தீர்மானங்களை எடுக்காது என்றே தாம் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். 13ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போது எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு தாம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு காத்திரமான ஓர் மாற்றீட்டு யோசனைத் திட்டம் முன்வைக்கப்படும் வரையில் அதனை இரத்து செய்வது புத்திசாதுரியமான தீர்வாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாகாணசபை முறைமை இரத்து செய்யப்பட வேண்டும். 13ஆம் திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில்இலங்கைக்கு பாதக நிலைமை ஏற்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ் எச்சரிக்கையானது இலங்கையின் தேசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டதாக சிலர் கூறுகின்ற போதிலும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அரசாங்கத்தில் தற்போது அங்கம் வகிக்கின்ற ஜி.எல்.பீரிஸ் மற்றும் டியூ குணசேகர போன்றவர்கள் கூடுதல் அக்கறையுடன் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 13+ தீர்வுத் திட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துகளை கூறினாலும் அரசாங்கம் மக்களுக்குப் பாதகமான ஒரு முடிவை ஒருபோதுமே எடுக்காது என ஒரு மூத்த அமைச்சர் அண்மையில் நடந்த சந்திப்பொன்றில் குறிப்பிட்டார். 13+ தொடர்பில் எழுகின்ற வாதப் பிரதிவாதங்கள் எதுவாக இருந்தாலும் மகிந்த சிந்தனை மக்கள் நலன் சார்ந்த சிந்தனையாகவே இருக்குமென்பதையே அவர் மறைமுகமாக கோடிட்டுக் காட்டியுள்ளார்.

13ஆம் அரசியல் திருத்தத்தை அரசாங்கம் அகற்ற நினைத்தால் இலங்கை இந்திய உறவு உடையும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள சுரேஸ் பிறேமச்சந்திரன் இலங்கை இந்திய உறவை இதுவரை காலமும் தானே சீர்படுத்தி வந்தவர்போல வெளியிட்டுள்ள அறிக்கையானது நகைப்பிற்கு இடமானது. இலங்கை இந்திய இராஜதந்திர உறவுகளிற்கும் 13+ திருத்தத்திற்கும் சுரேசின் கூற்றிற்கும் என்ன சம்பந்தம் உள்ளதுவோ தெரியவில்லை.

சுரேஸ் நினைப்பது போன்று ராஜதந்திர உறவுகள் என்பது சின்னத்தனமான உறவுகள் அல்ல. அவை ஒவ்வொரு நாடுகளும் தமது ராஜாங்க திணைக்களங்கள் மற்றும்பூகோள அரசியல் நலன் சார்ந்த செயற்திட்டங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் உறவுகள் ஆகும். இந்த உறவை புரிந்து கொள்ளாமல் (பெரிய மண்டை) என்று கூறப்படுகின்ற குழுத் தலைவராகிய சுரேஸ் பிறேமச் சந்திரன், எல்லோரும் அறிக்கை விடுகிறார்கள் நானும் ஒரு தடவை விட்டுப் பார்ப்போம் என விடுகின்ற அறிக்கைகள் நகைப்பிற்கு இடமானதாகவே உள்ளது.


13+ விவகாரம் தற்போது சூடு பிடிக்கும் விவகாரமாக மாற்றமடைந்துள்ள போதிலும் மக்களிற்கு பாதகமான ஒரு முடிவுக்குச் செல்ல அரசாங்கத்திலுள்ளவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ●



# இலங்கையில் குறிப்பிட்டளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது

# மக்களை மீள்குடியேற்ற, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## – ஐ.நா. பிரதிநிதி சலோகா பியானி




(கொழும்பு)

வடக்கிற்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு சந்தேகம் வெளியிட்டுள்ளது. யுத்த நிறைவின் பின்னர் இலங்கையில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக, உள்ளக இடம் பெயர்வு மற்றும் மனித உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட பிரதிநிதி சலோகா பியானி தெரிவித்துள்ளார்.

எனினும், நாட்டின் வடபகுதியில் தற்போது அமுல்படுத்தப்படும் தீர்வுத் திட்டத்தின் ஸ்திரத்தன்மை குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். முகாம்களை மூடி, இடம் பெயர் மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் முகாம்கள் மூடப்பட வேண்டும் என்பதே தமது விருப்பமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தக் கூடிய வகையிலும், நிரந்தரமானதுமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். வெறுமனே முகாம்கள் மூடப்படுவதன் மூலம் இடம் பெயர் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட முடியாது என பியானி சுட்டிக் காட்டியுள்ளார்.

# சிறுமி பலி

மத்துகம - யடதொல தமிழ் வித்தியாலயத்திற்கு அருகில் மரமொன்றின் கிளை முறிந்து வீழ்ந்ததில் அதனுள் அகப்பட்டு 5 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலர் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுழல் காற்று காரணமாக மரக்கிளை முறிந்து வீழ்ந்துள்ளது.

காயமடைந்த சிறுமி நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# இறைவரி திணைக்களத்தில் ஊழல்; இரகசிய பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பாரிய நிதி மோசடி ஒன்று இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, அதற்கான விசாரணைகளை இரகசிய பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதன் பொருட்டு பொலிஸாரும் தகவல் தொழில் நுட்ப வல்லுனர்களும் இணைந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணனிகளை பரிசோதனைக்கு உட்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் தொடர்பில், போலியான தகவல்களை வழங்கி, சுமார் 180 மில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே அது தொடர்பில் இரகசிய பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# நாடாளுமன்றில் விசேட பாதுகாப்பு

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் நாட்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்ட யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் நாடாளுமன்றத் தொகுதிக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வறைகள் உள்ளிட்ட சகல பகுதிகளையும் பாதுகாப்புப் பிரிவினர் சோதனையிடுவார்கள் என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் 8ஆம் திகதி விசேட விருந்தினர்களுக்கு மட்டுமே பார்வையாளர் கலரியில் அமர அனுமதியளிக்கப்படும். இதற்கு மேலதிகமாக போக்குவரத்து தொடர்பிலும் விசேட பாதுகர்ப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திவிநெகும சட்ட மூலத்துக்கு மகாநாயக்க தேரர்கள் ஆதரவு



(கொழும்பு)

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள திவி நெகும சட்ட மூலத்துக்கு மகாநாயக்க தேரர்கள் ஆதரவை வெளியிட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட மூலம் நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று மகாநாயக்க தேரர்கள் குறிப்பிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று மகாநாயக்க தேரர்கள் தெரிவித்திருப்பதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதம் கிடைக்கப்பெற்ற நிலையில், அந்தச் சட்ட மூலத்தை சிக்கல் இன்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தச் சட்ட மூலத்துக்கு எதிராக 12 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் அரச ஊழியர்களுக்கு எதிராக முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள 2,535 முறைப்பாடுகளில் பெரும்பான்மையானவை அரசாங்க ஊழியர்களுக்கு எதிரானவையாக உள்ளன எனவும், இது அரசாங்க சேவையில் ஊழல் கணிசமாக அதிகரிப்பதைக் காட்டுகின்றது எனவும் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கூறியுள்ளது.

இந்த ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகளில் 130 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு அதில் 69 முறைப்பாடுகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகளில் 32 முடிவுக்கு வந்துவிட்டன. இதில் 17 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்கள், பொலிஸ மற்றும் பாடசாலை நிர்வாகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்வதாக ஆணைககுழு தெரிவித்துள்ளது.

இந்த ஆணைக்குழு, பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ரி.ஜயவர்தனவுக்கு எதிராக தரக்குறைவான எண்ணெய் இறக்குமதி செய்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளது.

# சிவில் பாதுகாப்பு படையினால் 200 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம்

(கொழும்பு)

கிளிநொச்சி - அம்பாள்நகர் பிரதேசத்தில் சிவில் பாதுகாப்பு படையினால் விவசாய வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுகுறித்த படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட முன்னாள் போராளிகள் 350பேர் உட்பட சுமார் 3000 இளைஞர் யுவதிகள் இந்த வேலைத்திட்டத்தில் பங்குபற்றினர்.




இது தொடர்பாக சிவில் பாதுகாப்புப் படையின் வட பிராந்தியப் பொறுப்பாளர் மேஜர் அனில் பண்டார தெரிவிக்கையில், எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளையும் சிவில் பாதுகாப்பு படையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்று, கிளிநொச்சி - அம்பாள்நகர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய வேலைத் திட்டத்தில், இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் 2200 பெண்களும் 800 ஆண்களும் அடங்குகின்றனர். சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த விவசாயத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புலம்பெயர்ந்தோருடன் பேச்சுவார்த்தை; லண்டன் சென்றது இலங்கைக் குழு!

(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கையின் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று லண்டன் சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இந்தக் குழு இலங்கையில் இருந்து புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரேன் பெர்னாண்டோ மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க ஆகியோர் தலைமையில் இந்தக் குழு அங்கு சென்றுள்ளது.

லண்டனில் வாழும் புலம்பெயர்ந்த முக்கிய தமிழர்களின் பிரதி நிதிகளைச்சந்தித்து, இலங்கைக்கான உதவிகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் தாங்கள் அங்கு செல்வதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரேன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கடந்த வருடமும் இவ்வாறான குழு ஒன்று அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை திரும்பியவர்களுக்கு நடமாடும் சேவை

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பியவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் நாளையும் மற்றும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இந்தச் சேவை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது உள்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால், இந்தியாவுக்கு, அகதிகளாகச் சென்று, நாடு திரும்பியவர்களுள் இலங்கை குடியுரிமை இல்லாதவர்களுக்காக இந்த சேவை நடத்தப்படுகிறது.

இதற்கு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகம் இதற்கு அனுசரணை வழங்குகிறது.

# வட்டக்கச்சி பிரதேசத்தின் அபிவிருத்தி

## படிப்படியாக முன்னேற்றமடையும்

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் அந்த பிரதேச மக்களின் ஒத்துழைப்பும் ஆர்வமும் முயற்சியும் இன்றியமையாத ஒன்று என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி வட்டக்கச்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 62 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட சந்தை கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் எங்களுடைய பிரதேசங்களின் அபிவிருத்தியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பல தசாப்தங்களாக இடம்பெறாத அபிவிருத்திப் பணிகள் சில வருடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது மேலும் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாரியளவிலான அபிவிருத்திப்பணிகளை மக்களின் எதிர்பார்ப்பு வேகத்திற்கு ஏற்ற விதத்தில் மேற்கொள்ள முடியாது. இது யாதார்த்தமானது. இன்று இந்த வட்டக்கச்சி பிரதேசம் நாளுக்கு நாள் அபிவிருத்தியின் பயன்களை உள்வாங்கிக்கொண்டிருக்கிறது.



எனவே மக்களின் வாழ்வையும், வளமான பிரதேசத்தையும் கட்டியெழுப்ப நாம் தொடர்ந்தும் எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்வோம். மக்களும் தங்களுடைய வளமான வாழ்வுக்காக எம்மோடு சேர்ந்து உழைக்கவேண்டும்.

வட்டக்கச்சி சந்தைச் சூழலை ஒரு அழகான சூழலாக மாற்றுவதற்கும், இரண்டாம் கட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் மீன்சந்தை மற்றும் மலசல கூடங்களைப் புனரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விரைவில மின்சாரமும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத்தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர் நன்னடத்தை தொடர்பான கருத்தரங்கு நேற்று முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

உடுவில் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி அ.சந்திரா சிறுவர்களுக்கு சிறுவர் நன்னடத்தை குறித்து விளக்கமளித்தார்.

இதில் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 9 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் எல்.எக்ஸ்.அன்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எம்.வி செல்வராசா, கௌரவ அதிதிகளாக யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.வை.ரவீந்திரன், யாழ்.அருள்அகம் பணிப்பாளர் வண.பிதா.ஏ.எம்.ஸ்ரீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (105)

# தேசிய பாசறைக்கு யாழிலிருந்து 24 பேர்

(சிகரம்)

இந்த வருடம் நடைபெறவுள்ள இலங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸின் வருடாந்த தேசிய பாசறையில் யாழ்.மாவட்டத்திலிருந்து 24 பேர் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸில் சேவைபுரியும் அங்கத்தவர்களே இந்தப் பாசறையில் பங்குபற்றவுள்ளனர்.

ஒக்டோபர் 29 ஆம் திகதி திருகோணமலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்தப் பாசறையில் ஒயிலாட்டம், முதலுதவிப் போட்டி, முகாம் பராமரிப்பு, தனிநபர் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பன நடாத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தற்போது யாழ். அணியினர் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன், உதவி ஆணையாளர் சோ. ஈழநேசன், படை அத்தியட்சகர் திருமதி ஜெயந்திமதி செல்வநாதன் ஆகியோர் தலைமையிலேயே இவர்கள் இந்தப் பாசறையில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை வரலாறு பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும், நாளையும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ்.ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பாட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(26.10.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 10 ஆம் திகதி. நட்சத்திரம் பூரட்டாதி முன்னிரவு 10.38 வரை. சித்தயோகம். திதி துவாதசி முன்னிரவு 10.39 வரை. இராகுகாலம் 10.33 - 12.03 வரை. சுபநேரம் 6.03 - 7.33 வரை. எமகண்டம் 3.03 - 4.33 வரை. குளிகன் காலம் 7.33 - 9.03 வரை. கேதாரகௌரி விரத 3 ஆவது நாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாழ்க்கைத்தரம் மேம்படும். சார்ந்தோர்க்கு உதவுவீர்கள். தொழில், புதிய பரிமாணம். இலாபம் அதிகரிக்கும். உடல் பலம் பெறும். விருந்து விசேஷம். |
| ரிஷபம் | உடல் சோர்வினால் செயல்களில் தாமதம். தொழிலில், குளறுபடி. ஆரோக்கியத்திற்கு உணவில் கவனம். போக்குவரத்து அவதானம். நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | சொல்லும், செயலும் சிறப்புறும். அருள் பலம். தொழிலில் இருந்த பாதகம் சரியாகும். சராசரி வரவு. அரச உதவி. எதிர்ப்புகள் விலகும். |
| கடகம் | அவசரப்பணி வந்து அல்லல் தரலாம். விரக்தி விலக்கவும். தொழிலில், நண்பர்களின் உதவி. அளவான பணவரவு. பாதுகாப்பில் கவனம். |
| சிம்மம் | உண்மை, நேர்மை உதவும். சமூக மதிப்பு உயரும். தொழில் வளர அனுகூலம் வரும். பணவரவு திருப்தி. இல்லறத்துணை மகிழ்வு. |
| கன்னி | பிறர் வியப்புடன் பார்க்கும் நிலை. பணவரவும் நன்மையும். சொத்து சேர்க்கை. தெய்வ வழிபாடு. அலுவலகத்தில் பாராட்டு. பணி விரைந்து முடியும். |
| துலாம் | உறவினர் அனுசரணை. பேச்சைக் குறைப்பது நல்லது. தொழில்நிலை சராசரி. கூடுதல் உழைப்பு. உணவில் கவனம். வெளியூர் பயணம். புது நட்பு மலரும். |
| விருச்சிகம் | தாராள பணவரவு. ஆடம்பரச்செலவு. உடல் நலம் சீராகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி. பிள்ளைகளால் பெருமை. |
| தனுசு | எதிர்பாராத பணவரவு. உறவினர்கள், நண்பர்கள் நெருக்கம். வழக்கில் திருப்பம். புதியவர் அறிமுகம். தொழிலில் புது யுக்தி. உழைப்பிற்கு பாராட்டு. வெற்றி. |
| மகரம் | உண்மையின் மீதான நம்பிக்கை. நண்பரின் உதவி. தொழில் வளர்ச்சி இலகு. புத்திரர் விரும்பியது வாங்குவீர்கள். சுபநிகழ்ச்சி நடத்த திட்டம். |
| கும்பம் | ஆற்றலுடன் செயல்படுகை. நிதானமும், செயல் திறனும் அதிகரிக்கும். உபரி வருமானம். குடும்பத் தேவை பூர்த்தி. நண்பருக்கு உதவி. |
| மீனம் | முரண்கள் ஏற்படும். பொறுமை சிக்கல் தவிர்க்கும். தொழில் நிலை சுமார். வரவை விட செலவு கூடும். இல்லறத்துணை உதவி. பழைய உறவு திடீர் வருகை. |

# சட்ட ஆணைக்குழுவால் முல்லைத்தீவில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு ஐக்கிய அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றுடன் இலங்கை சட்ட ஆணைக்குழு நடத்தும் 2 நாள் சட்ட நடமாடும் சேவை முல்லைத்தீவில் இடம்பெறவுள்ளது.


எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதுடன் 28 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 19 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய மக்களுக்கு காலை 9 மணி முதல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பிற்பகல் 1 மணி முதல் 5 மணி வரை கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 46 கிராமமக்களை உள்ளடக்கியதாக கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.


29 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் இலங்கை சட்ட ஆணைக்குழுவினால் இலவச சட்ட ஆலோசனைகள், காணி உறுதி, சொத்து, தாபரிப்பு , குடும்ப வன்முறை, மரணச்சான்றிதழ் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அவற்றுக்குரிய தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

எனவே இந்நடமாடும் சேவையில் மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)



யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வாணி விழா அண்மையில் நடைபெற்றபோது மாணவி ஒருவருக்கு விருந்தினர் பரிசில் வழங்குவதையும், விருந்தினர்களுடன் மாணவர்கள் அமர்ந்திருப்பதனையும் காணலாம் (20)



# உற்சாக வரவேற்பு

(சென்னை)

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவானாகத் திகழும் ஆர்ஜென்ரீனாவின் டீகோ மரடோனாவுக்கு இந்தியாவின் கேரள மாநிலத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கால்பந்தாட்ட இரசிகர்கள் பலர் டீகோ மரடோனாவுக்கு வரவேற்பளித்துள்ளனர்.

வர்த்தக நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு டீகோ மரடோனா இந்தியா சென்றுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனா உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் சம்பியனாக தெரிவானபோது டீகோ மரடோனா அந்த அணிக்கு தலைமை தாங்கியிருந்தார்.

# கால்பந்து நடுவர் அடித்துக் கொலை

கால்பந்தாட்ட போட்டியொன்றின்போது நடுவரொருவர் வழங்கிய தீர்ப்பினால் ஆத்திரமடைந்த இரசிகரொருவர் அவரைக் கொலைசெய்த சம்பவமொன்று சிம்பாப்வேயில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் தற்போது செய்திகள் வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது, சிம்பாப்வே நாட்டின் டகாவிரா கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை கால்பந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றுள்ளது. உள்ளூர் அணிகள் இரண்டிற்கிடையே இடம்பெற்ற இப்போட்டியானது ஆரம்பம் முதலே சுவாரசூஷ்யமாக இருந்துள்ளது.

இப்போட்டியில் ஐசாக் பொபானா என்ற 34 வயதான நடுவரொருவர் உதவி நடுவராகக் கடமையாற்றியுள்ளார். இந்நிலையில் போட்டியின்போது அணியொன்று அடித்த கோலானது செல்லுபடியற்றதென ஐசாக் பொபானா தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த சர்ச்சைக்குரிய தீர்ப்பினால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் கோலினை அடித்த அணியின் இரசிகர்களுக்கும், உதவி நடுவரான பொபானாவுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து ஆத்திரமடைந்த இரசிகரொருவர் கட்டையொன்றினால் நடுவரின் தலையில் பலமாக அடித்துள்ளார்.

சற்றும் எதிர்பாராத இவ் அடியினால் ஐசாக் பொபானா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பொபானாவைத் தாக்கிய நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் அவரைப் பொலிஸார் தற்போது தேடி வருகின்றனர்.

ஆபிரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் உள்ளூர் கால்பந்தாட்டப் போட்டிகளின் போது அடிக்கடி வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த ஜோடி நாங்கள்தான்

(புதுடில்லி)

உலக கிரிக்கெட் அரங்கில் தற்போது நாங்கள்தான் சிறந்த தொடக்க ஜோடி. இதனை யாராலும் மறுக்க முடியாது என கம்பிர் தெரிவித்தார்.

நானும், சேவாக்கும் இணைந்து தொடக்க ஜோடியாக சராசரியாக 53 ஓட்டங்கள் எடுத்துள்ளோம். உலக கிரிக்கெட் அரங்கில் இது தான் சிறந்தது என நினைக்கிறேன். சதம் அடிக்காததால் எனக்கு எவ்வித நெருக்கடியும் இல்லை. ஒவ்வொரு முறையும் சதம் அடிக்க முடியாது. தொடக்க வீரராக சிறப்பாக செயற்படுவதே முக்கியம். தென்னாபிரிக்காவில் ஒரு முறை 93 ஓட்டங்கள், அவுஸ்ரேலியாவில் 85 ஓட்டங்களை எடுத்துள்ளேன். அப்போது 7 அல்லது 15 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தால் எனது சதம் பற்றி அதிகம் விவாதித்திருக்க மாட்டார்கள்.

எனது துடுப்பாட்டத்தில் குறை எதுவும் இல்லை. அப்படிக் குறை இருந்தால், ஒரு நாள் போட்டிகளில், கடந்த 24 இன்னிங்சில் 1100 ஓட்டங்களை எடுத்திருக்க முடியாது. டெஸ்ட், ருவென்ரி–20, ஒருநாள் போட்டி ஆகிய மூன்றும் வெவ்வேறானவை. அனைத்திலும் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவது மிகவும் கடினம்.

எனது தலைமையிலான கொல்கத்தா அணி ஐ.பி.எல்., தொடரில் சாம்பியன் பட்டம் வென்றது. இதற்காக எல்லாத் தொடர்களிலும் வெற்றி பெற முடியாது. இங்கிலாந்துக்கு எதிரான தொடரை பழிவாங்கும் தொடர் எனக் கூறுவதை ஏற்க இயலாது. ஏனெனில் கிரிக்கெட் அல்லது எந்த ஒரு விளையாட்டிலும் பழிவாங்குதல் என்ற வார்த்தைக்கு இடமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய அணியில் சேவக், கம்பீருக்கு மாற்றாக வேறு தொடக்க வீரர்கள் இல்லை என, பாகிஸ்தான் முன்னாள் கப்டன் அக்ரம் குறிப்பிட்டார். ராவிட், லட்ஸ்மன் ஓய்வுபெற்ற நிலையில் நடுவரிசையில் போதிய அனுபவம் இல்லை. இந்த நேரத்தில் தொடக்க ஜோடியை மாற்றுவது சரியாக இருக்காது எனவும் தெரிவித்தார்.



# என்னைக் கொல்ல முயல்கிறார் கணவர்



கணவர் தன்னை கொலை செய்ய முயலுவதாக ஒலிம்பிக் விளையாட்டில் தங்கப்பதக்கம் வென்ற ஜேம்சின் மனைவி குற்றம் சாட்டியுள்ளார். இரண்டு வருடங்கள் முன்பு சைக்கிள் ஓட்டும் போது ஏற்பட்ட விபத்தில் அவரது மூளையில் பாதிப்பு ஏற்பட்டது. அதனை தொடர்ந்து அவர் பித்து பிடித்தவர் போன்று செயற்படுகின்றார். அடிக்கடி கோபப்படுகின்றார், குழந்தைகளை துன்புறுத்துகின்றார். சமீபத்தில் வீட்டில் ஏற்பட்ட விவாதத்தில் என்னை கழுத்தை நெறித்து கொலை செய்ய முயன்றார். மூச்சு விடக்கூட இயலாத நிலையில் எனது தங்கையின் உதவியுடன் உயிர்பிழைத்துள்ளேன். நான் திருமணம் செய்யும் போது என்னை அன்போடு பராமரித்த ஜேம்ஸ் விபத்திற்கு பிறகு முற்றிலும் மாறிவிட்டார். தற்போது ஒவ்வொரு நாட்களும் எனது கணவருடம் உயிருக்கு பயந்து வாழ்வது மிகவும் சிரமமாக இருப்பதாக ஜேம்சின் மனைவி தனது கணவர் பற்றித் தெரிவித்துள்ளார்.

# செரீனா அபார வெற்றி



(இஸ்தான்புல்)

பெண்கள் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் செரீனா வில்லியம்ஸ் இரண்டாவது வெற்றியைப் பதிவாக்கியுள்ளார்.

பெண்கள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி ஆண்டுதோறும் இறுதியில் நடத்தப்படுவது வழக்கம். இதில் உலக தரவரிசையில் முதல் 8 இடங்களை வகிக்கும் வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்க முடியும். இதன்படி இந்த ஆண்டுக்கான பெண்கள் சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டி துருக்கியின் இஸ்தான்புல் நகரில் ஆரம்பமாகியுள்ளது.

மொத்தம் ரூ261/2* கோடி பரிசுத்தொகைக்கான இந்த போட்டியில் சம்பியன் பட்டம் கைப்பற்றும் வீராங்கனை அதிகபட்சமாக ரூ.91/2 கோடி வரை பரிசாக வெல்ல முடியும்.

இதில் பங்கேற்றுள்ள வீராங்கனைகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர். ரெட் பிரிவில் விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), ஏஞ்சலிக் கெர்பர் (ஜெர்மனி), லீ நா (சீனா) ஆகியோரும், வைட் பிரிவில் மரிய ஷரபோவா (ரஷ்யா), அக்னீஸ்கா ராத்வன்ஸ்கா (போலந்து), பெட்ரா கிவிடோவா (செக்குடியரசு), சாரா எர்ரீனி (இத்தாலி) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு வீராங்கனையும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீராங்கனையுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் வீராங்கனைகள் அரைஇறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

தொடக்க நாளில் ஏஞ்சலிக் கெர்பரை தோற்கடித்து இருந்த ஒலிம்பிக் சம்பியன் செரீனா வில்லியம்ஸ் நேற்று, சீனாவின் நாலீயை 7-6 (2), 6-3 என்ற நேர் செட்டில் வீழ்த்தி 2ஆவது வெற்றியை ருசித்தார்.

இதற்கிடையே, வைரஸ் காய்ச்சல் காரணமாக நடப்பு சம்பியன் கிவிடோவா இந்த போட்டியில் இருந்து திடீரென விலகியுள்ளார். தொண்டையில் புண், வயிற்று வலி போன்ற பிரச்சினையால் அவதிப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார். இதையடுத்து அவருக்கு பதிலாக 9ஆம்நிலை வீராங்கனை அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் சேர்க்கப்பட்டுள்ளார்.

# ஆஷஸ் தொடரை விட இந்தியாவில் ஆடுவது சவாலானது



(லண்டன்)

அவுஸ்ரேலியாவிற்கு எதிரான ஆஷஸ் தொடரை வெல்வதை விட, இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வெற்றிக் கொள்வது மிகவும் கடினம் என இங்கிலாந்து அணி வீரர் மேட் பிரையர் தெரிவித்தார்.

27 ஆண்டுகளாக இந்தியாவை, இந்தியாவில் வீழ்த்த முடியவில்லை. ஆனால் தற்போதைய இங்கிலாந்து அணியின் முக்கியமான அம்சம் என்னவெனில், எப்போதெல்லாம் ஒரு இலக்கை நிர்ணையித்து அதை நோக்கிச் சென்றாலும், அணி எழுந்து நின்று தங்கள் ஆட்டத்தின் மூலம் செய்ய இயலாததாக இருந்ததைச் செய்து காட்டியுள்ளது.

இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு இந்த மாத இறுதியில் சென்று டெஸ்ட், ஒருநாள், மற்றும் ருவென்ரி- 20 கிரிக்கெட்டில் பங்கேற்க உள்ளது.மீண்டும் கெவின் பீட்டர்சன் இங்கிலாந்து அணிக்குத் திரும்பியுள்ளது, இங்கிலாந்திற்கு பலம் எனவும் அவர் தெரிவித்தார்.

# ருவென்ரி–20 கப்டன்



(கொழும்பு)

இலங்கை அணியின் ருவென்ரி – 20 கப்டனாக மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ருவென்ரி – 20 உலகக் கிண்ண போட்டித் தொடரைத் தொடர்ந்து கப்டன் பதவியை மஹேல ஜெயவர்த்தன இராஜினாமாச் செய்தார். இதனை அடுத்து ருவென்ரி – 20 கப்டனாக மத்தியூஸும், துணைக் கப்டனாக மலிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்துள்ளது.

# பங்களாதேஷ் பயிற்றுநர் இராஜினாமா

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக அவ்வணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகித்து வந்த றிச்சாட் பைபஸ் தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக 4 மாதங்கள் வரை பதவி வகித்த றிச்சாட் பைபஸ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமலேயே பதவி வகித்து வந்தார். இந்நிலையிலேயே ஒப்பந்தம் தொடர்பான கருத்து மோதல்கள் திரும்ப ஏற்பட்டதை அடுத்து அவர் பதவி விலகியுள்ளார். பங்களாதேஷ் அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவி வகிக்குமாறு 3 தடவைகள் தன்னை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அணுகியதாகவும், முதலிரண்டு தடவைகளும் தான் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்திருந்ததாக அவர் தெரிவித்திருந்தார். பங்களாதேஷ் கிரிக்கெட் அணியோடு அதிக நாட்கள் செலவிட வேண்டி இருந்ததாகவும், அதற்குத் தான் தயாராக இல்லாத நிலையிலேயே அவற்றை மறுத்ததாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் மூன்றாவது தடவையாக தன்னை அணுகும் போது ஏற்கனவே கேட்டுக் கொண்டபடி 320 நாட்கள் அணியோடு இருக்கத் தேவையில்லை எனவும், இரண்டு தொடர்களுக்கு நடுவே தனது வீட்டுக்குச் சென்றுவர பங்களாதேஷ் கிரிக்கெட் சபை சம்மதித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார். எனினும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தனக்கான ஒப்பந்தத்தை வழங்கும் போது தனது நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் அந்தக் கருத்து அந்த ஒப்பந்தத்தில் காணப்படவில்லை எனவும், அதன் காரணமாக ஒப்பந்தத்தை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# விளையாட்டுச் செய்திகள்

## கரைதுறைப்பற்று சம்பியன்



(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகத் தெரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி சம்பியனானது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் முல்லைத்தீவு மாவட்ட பிரதேசங்களிடையிலான முதற் சுற்று ஆட்டங்கள் நிறைவவடைந்துள்ள நிலையில் பிரதேச செயலகத் தெரிவு அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்டப் போட்டிகள் அண்மையில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தெரிவு அணியை எதிர்த்து புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத் தெரிவு அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகியதுடன் இரு அணிகளுமே கோல் போடும் முயற்சியை மேற்கொண்டனர். இரு அணிகளுக்கும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். இருப்பினும் இரு அணிகளினதும் பிற்கள வீரர்களின் சிறப்பான தடுப்பணையைத் தாண்டி உட்செல்ல முடியவில்லை. இறுதியில் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, கோல் எதனையும் இரு அணிகளாலும் போடமுடியவில்லை. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது. இப்போட்டி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகன், வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை, முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் கின் செயலாளர் சண்முகராஜ் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## வடமராட்சி வலயத்திலும் பெரும் கிரிக்கெட் போட்டி

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் வடக்கின் மாபெரும் போர், பொன் அணிகள் போர் போன்ற கிரிக்கெட் போட்டிகளைப் போல இந்தப் போட்டியும் அமையவுள்ளது.

இந்தப் போட்டியானது 28 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் 29 ஆம் திகதி போட்டி நெற்கொலு பொதுவிளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளது.

## பாடசாலைகளுக்கிடையிலான விபுலானந்தன் நினைவு கூடைப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வருடந்தோறும் நடத்திவரும் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளன.

இம்முறை நடைபெறும் இச்சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன.

பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, வேம்படி உயர்தரப் பாடசாலை ஆகிய அணிகள் இம்முறை பங்குபற்றுகின்றன. இறுதியாக கடந்தவருடம் நடைபெற்ற போட்டியில்

கடந்த வருட போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## பிரவீன்சான் சிறப்புப் பந்து வீச்சு சுருண்டது மட்டக்களப்பு இந்து

(மட்டக்களப்பு)


பிரவீன்சானின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிச் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் சென்ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' பிரிவு அணி தனது முதலாவது போட்டியில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியை எதிர்கொண்டது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணி பிரவீன்சானின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் 25 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களை மாத்திரம்பெற்றுக்கொண்டது. இதில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட பிரவீன்சான் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 58 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 10 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந் தது. (எஸ்.பி)



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டத் தடகளப் போட்டியின் போது, பெண்களுக்கான அஞ்சலோட்டப் போட்டியின் வீராங்கனைகள் முதல் இடம் பிடிக்கச் சீறிப்பாய்ந்து செல்வதைக் காணலாம். பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி அண்மையில் மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரில் வடமாகாணம் 178 புள்ளிகளைப் பெற்று ஆறாவது இடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

## அளவெட்டி மத்தியை வீழ்த்தி கிண்ணம் வென்றது காமாட்சி

(மானிப்பாய்)

மானிப்பாய் வட்ட லியோ கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஸ்ரீ காமாட்சி அணி சம்பியனாகியது.

மானிப்பாய் வட்ட லியோ கழகத்தினால் நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது யாழ்ப்பாணத்தில் மென்பந்து விளையாடும் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வந்தது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த 20ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழக அணி 6 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி 4.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி கொண்டு சம்பியனாகியது.

இந்தச் சுற்றுப் போட்டியின் தொடர் நாயகனாக ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகத்தின் ஏ.ஜெயரூபனும், இறுதிப்போட்டியின் நாயகானக அதே விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கிருபவனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி குறித்து மானிப்பாய் லியோ கழகத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், மென்பந்து கிரிக்கெட் அணிகளை வளர்க்கும் நோக்கிலேயே இச்சுற்றுப் போட்டியை நடத்துவதாகவும், தொடர்ந்தும் இப்போட்டியை நடத்துவதற்குத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.



# எட்டுச் சுரைக்காயும், மெக்சிக்கோ அதிபரும்


மெக்சிக்கோ இயற்கை வளமுள்ள நாடு. மக்கள் தொகை அதிகம் இல்லை. மேலும் நிறைய மெக்சிக் மக்கள் அமெரிக்காவிற்கு உழைப்பாளிகளாகப் போய் தம் சொந்தங்களுக்கு மாதந் தோறும் பணம் அனுப்புகிறார்கள், அதுவும் ஒரு முக்கியமான பொருளாதார மேலெடுப்புக்கு உதவுகிறது. மெக்சிக்கோவின் எண்ணெய் வளமும் உதவுகிறது. மெக்சிக்கோவின் மூன்று முக்கிய அரசியல் கட்சிகளிடையே அதிகாரத்துக்கு இழுபறி வெகு காலமாக நடக்கிறது. முக்கிய கட்சியான PRI ஒரு நடுவாந்திரக் கட்சி. வெகுகாலம் அங்கு அரசியல் அதிகாரத்தில் இருந்து நாட்டைக் குட்டிச் சுவராக்கிய பெருமை இதற்குச் சேரும்.

தேர்தலில் வென்று மெக்சிக்கோவின் அதிபராகி விட்டார். பென்யா நியதோ அமைப்புப் புரட்சிக் கட்சியின் (Institutional Revolutionary Party) உறுப்பினர். ஸ்பானிஷ் மொழி எழுத்துகளில் சுருக்கமாக PRI என்றறியப்படும் இந்தக் கட்சி மெக்சிக்கோவை 1929 இலிருந்து 2000 ஆவது ஆண்டு வரை ஆண்டது - நவீன வரலாற்றிலேயே மிக நீண்ட காலம் நடந்த அரசியல் நாடகம் இது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இவர் மெக்சிக்கோ மாநிலத்தின் ஆளுநராக இருந்தார்.

தலைப்புகள் அவருக்கு நினைவில்லை. அவர் மொத்த பைபிளையும் படித்ததில்லை என்ற போதும், அதில் சில பத்திகள் அவரது இளம்பருவத்தில் மிக நம்பிக்கையூட்டுவதாக இருந்தன என்று யோசித்துச் சொன்னார். அதற்குப் பின், வரலாற்றாளர் என்ரீகே க்ரௌஸ் எழுதிய "லா ஸீயா டெல் அல்கீலா" அவருக்கு எத்தனை பிடித்திருந்தது என்று சொன்னார். அந்த நாவலை எழுதியவர் கார்லோஸ் ஃப்வெண்டேஸ்.

அதற்குப் பின் அவர் இன்னும் கூடுதலாகக் குழம்பினார், தன்னால் நினைவு கூர முடியாத புத்தகங்கள், மேலும் எழுத்தாளர்களின் பெயர்களின் வட்டச் சுழலில்

"டெலிவிசா" - மெக்சிக்கோவின் மிக முக்கியமான டெலிவிஷன் நெட்வேர்க் இதுதான் மெக்ஸிகோவின் தொலைக்காட்சிப் பார்வையாளர்களில் மிகப் பெரும்பான்மையினரை இந்த நெட்வேர்க் கவர்ந்திருக்கிறது. "தேர்ட் டிக்ரி" என்னும் ஓர் உரையாடல் நிகழ்ச்சியின் தொகுப்பாளர் சொன்னார், "நன்றாகவோ, மோசமாகவோ ஆள்வதற்கும், எக்கச்சக்கமாக படிக்கும் பழக்கத்துக்கும் ஒரு




என்று நினைக்கிறார்கள்."

அந்தப் புத்தகக் கண்காட்சியில் தோன்றியதற்குப் பின், பென்யோ நியதோ மேன்மேலும் சறுக்கல்களைச்



1929 இலிருந்து தொடர்ந்து பல பத்தாண்டுகள் பதவியிலிருந்த இந்தக் கட்சி 2000த்தில் பத்வியையும் அதிகாரத்தையும் இழந்து ஒரு 12 ஆண்டுகள் வெளியில் இருந்தது. இப்போது 2012 இல் மறுபடி மத்திய அரசில் அதிகாரத்தையும், அதிபர் பதவியையும் கைப்பற்றி இருக்கிறது.

அவருக்கு 45 வயதாகிறது ஆனால் பல ஒளிப்படங்களில் தோற்றத்தைப் பார்த்தால் 12 வயதே ஆனவர் போலத் தெரிகிறார். அவருடைய வெளுத்தநிறத் தோலும், கறுப்பான, வட்டநிலாக் கண்களும், ஜெல் தடவிப் ப.்.ப் வைத்து வாரிய தலையுமாக ஒரு சீரியல் காட்சி ஹீரோ போலத் தோன்றுகிறார். அவர் பெயர், என்ரீகெ பென்யா நியதோ (Enrique Peña Nieto),

இவரது போட்டியாளர்கள், இடதுசாரிக் கட்சியான ஜனநாயகப் புரட்சிக் கட்சி மற்றும் வலதுசாரியின் National Action Party ஆகியவற்றின் வேட்பாளர்கள். இந்த வலதுசாரிக் கட்சி கடந்த 12 வருடங்களாக மெக்சிக்கோவை ஆண்டு வந்தது. அந்த வருடங்கள் படுமோசமான வருடங்கள் என்று அநேகரால் வருணிக்கப்படுகின்றன.

பென்யா நியதோ குறைகளற்றவர் அல்ல. சென்ற டிசம்பரில், ஒரு நிருபர் பென்யா நியதோவிடம் அவரது வாழ்வை மாற்றிய மூன்று புத்தகங்களைக் குறிப்பிடும்படி கேட்டார். அவருடைய தடுமாற்றமான பதில், நான்கு நிமிடங்கள் நீடித்தது. முதலில், அவர் தனக்குப் பிடித்த நாவல்களைப் பற்றி குழறினார். ஆனால் அவற்றின்

சிக்கிக் கொண்டார். கூடியிருந்த பார்வையாளர்களின் உதவியை நாடினார், தனக்குச் சில தகவல்களைக் கொடுத்து உதவுமாறு கேட்டார். இறுதியில் பென்யா நியதோ இரண்டு தலைப்புகளைச் சொன்னார், இரண்டுமே ஜெ.்.ப்ரி ஆர்ச்சர் எழுதிய பிரபல புத்தகங்களின் பெயர்கள். ஆர்ச்சர் ஒரு பிரிட்டிஷ் எழுத்தாளர், அவருடைய அரசியல் வாழ்வுமே, சட்டத்தின்படி உண்மை சொல்வதாக உறுதி எடுத்துக் கொண்ட பின்னர் பொய் சொன்னதால் தண்டிக்கப்பட்டு, சிறை சென்றதில் வீழ்ச்சி அடைந்தது. நியதோவின் சிரிப்பும், உடல் மொழியும் அசந்தர்ப்பமாகத் தெரிந்தன, இப்படிப் பெயர்கள் சொல்வதை அவர் ஏதோ நகைச்சுவையென்று நினைத்தது போல இருந்தது.

இந்த சம்பவம் மெக்சிக்கோவில் ஏற்படுத்திய பெரிய பரபரப்பு அனேகமாக மேல் தட்டு மனிதரிடையேதான் என்ற போதும், செய்தித்தாள்களிலும், சமூக ஊடகங்களிலும் பென் நியதோ பெரிதும் அவமதிக்கப்பட்டார். அவருக்குச் சார்பாகப் பேச வந்தவர்கள் நிலைமையை இன்னும் மோசமாகத்தான் ஆக்கினார்கள். பென்யா நியதோவின் மகள் பௌலினா ட்விட்டரில் இப்படி எழுதினார்: "இன்னும் வேலைக்காரப் பயல்களாக இருக்கிறவர்கள் தான் இப்படிப் பொறாமையில் மற்றவர்களை விமர்சிக்கிறார்கள்."

சம்பந்தமுமில்லை."

யுனெஸ்கோவின் புள்ளிவிவரங்கள் சொல்வதன்படி, மெக்சிக்கோவில் 93.4 வீத மக்களுக்கு எழுதப் படிக்கத் தெரியும். ஆனால் அதற்கு, அத்தனை பேருக்கும் சரளமாக எழுதப்படிக்க வரும் என்று அர்த்தமில்லை. இங்கு ஒரு புத்தகம் 3000 பிரதிகள் விற்றால், அது "பிரமாதமாக" விற்றது என்று அர்த்தம்.

பொருளாதாரக் கூட்டுறவுக்கும், வளர்ச்சிக்குமான அமைப்பின் புள்ளி விவரங்களின்படி 52 மில்லியன் மெக்சிக்கர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள் - அதாவது மாதத்துக்கு 130 அமெரிக்க டொலர்கள் தான் சம்பாதிக்கிறார்கள். இங்கு விலைவாசியோ அமெரிக்க விலைவாசிக்கு நிகராக உள்ளது. அதில் மொத்த மக்கள் தொகையில் பாதிப்பேர் வறுமையில்.

"நம் கல்வி அமைப்பிருந்த இடத்தைத் தொலைக்காட்சி பிடித்துக் கொண்டு விட்டது" என்கிறார் செர்ஹியோ கொன்ஸாலெஸ் என்ற எழுத்தாளர். அரசியல், பண்பாடு ஆகியன பற்றிப் பல புத்தகங்கள் எழுதியவர். "இந்த ஊடகம் படிப்பை ஊக்குவிப்பதில்லை. தாம் தொலைக்காட்சியின் மூலம் தகவல்களைப் பெறுவதாக மக்கள் நம்புகிறார்கள், அதனால் படிப்பது முக்கியமில்லை

சந்தித்திருக்கிறார். ஜனவரி இறுதியில், ஒரு நிருபரிடம் தன் முதல் திருமணம் பற்றிப் பேசுகையில், அந்த நாட்களில் தான் வரிசையாகப் பல பெண்களோடு கள்ள உறவு வைத்திருந்ததாகவும், அப்படி உறவுகளில் இரண்டு குழந்தைகளும் பிறந்தன என்றும் சொல்லி இருக்கிறார். இப்படி திருமணத்துக்கு வெளியில் பிறக்கும் குழந்தைகள், "ஆண் பெருமை மிக்க மெக்சிக் சமுதாயத்தின்

**- மைத்ரேயன் -**

திட்டமான அமைப்பில் மிகச் சாதாரணமான விஷயமே." என்று நாவல் எழுத்தாளர் ஜே.எம். செர்வின், பதிலுக்குச் சுட்டிக் காட்டி இருக்கிறார். மேலும் இந்தத் தகவல், பென்யோ நியதோவுக்கு ஆண் வாக்காளர்களிடையே கூடுதலான ஆதரவைக் கூடப் பெற்றுத் தந்திருக்கும் என்றார்.

நாவலாசிரியர் ஃபாடனெல் லியோ, அனேக மெக்சிக்கர்கள் பென்யா நியதோவின் "இலக்கிய"ச் சறுக்கல்களை வரவேற்கக் கூடும் என்கிறார். "படிப்பறிவற்ற ஒரு மக்கள் கூட்டத்துக்கு, படிப்பறி வில்லாத ஒரு வேட்பாளர் தம் கூட்டாளியாகத் தெரியலாம்" என்கிறார்.

பென்யா நியதோ பெரும் பணக்காரர், வெள்ளை நிறத்தோல் கொண்டவர், பார்க்க நன்றாக இருக்கிறார், அப்புறம் ஒரு சினிமா நட்சத் திரம் போன்ற மனைவியும் கொண்டவர். ஆன்ஹெலிகா ரீவெரா, ஒரு முன்னாள் தொலைக் காட்சி சீரியல் நாடக நட்சத்திரம் மெக்சிக்கோவைப் பொறுத்த வரை அவர் வென்று அதிபரானதில் வியப்பில்லை என்கிறார்கள்.

# கண்ணாடி போன்ற மண்

கண்ணாடி போன்ற மண். கேட்டாலே புதிராக இருக்கிறதல்லவா? செடிகள் எப்படி வளர்கின்றன? விதைகள் எப்படி வேர் விட்டு உயர்ந்து எழுகின்றன என்பது இன்னமுமே அறிவியலுக்குத் தெரியாத மர்மம். ஒரு காரணம் செடிகள் மண்ணடியில் அல்லது மண்ணால் மூடப்பட்டிருக்கையில் இந்த நடவடிக்கையைச் செய்கின்றன என்பது. கருப்பைக்குள் ஒலிக் கற்றைகளைச் செலுத்தி கரு எப்படி உயிராகிறது என்று காண முடிகிற அறிவியலால் இந்த விதைகள் செடிகள் விவகாரத்தை அறிய முடியாமல் இருப்பதைப் பொறுக்க முடியுமா? எனவே இப்போது வருகிறது. ஒளி ஊடுருவும் மண். அதை மண் என்று அழைப்பது சரியா என்று தெரியவில்லை. ஆனால் இனி செடிகள் தம் இரகசியத்தை நம்மிடமிருந்து பொத்தி வைக்க முடியாது என்பது தெரிகிறது. ஸ்கொட்லாந்தின் டண்டீ நகரில் உள்ள ஆபர்டே பல்கலையின் ஆய்வாளர்கள் பொலிமர் கூட்டு ஒன்றை வைத்து இந்த "மண்ணை" உருவாக்கி இருப்பதாகத் தெரிகிறது.

ட்ரான்ஸ்பரெண்ட் சொஸைட்டி என்று மனிதரின் எதிர்காலச் சமுதாயத்தை அழைக்கிற டேவிட் ப்ரின் (அறிவியலாளர், அறிவியல்



புனைவாளர்) நம்மை அக்கருத்தை ஏற்க வைக்க முடியாமல் இருந்திருக்கலாம். மனித மனதின் இரகசியக் குகைகளை என்ன ஒளியால் ஊடுருவி விட முடியும் என்று நினைப்பதே நமக்குப் பழகி இருக்கிறது. குகைவாசிகளாக எத்தனை ஆயிரம் வருடங்கள் இருந்தோமோ நாம், அந்த வளர்ப்பு இன்னும் ஆழ்மனதில் இருக்கிறது போலும். ஆனால் செடிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டால், மனிதர்களையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்த எத்தனை காலம் ஆகி விடப் போகிறது.

# இல்லை! இல்லை!




- ☆ சிலந்தியின் உடலில் எலும்புகள் இல்லை.
- ☆ வெட்டுக்கிளிகள் தண்ணீர் குடிப்பதில்லை.
- ☆ ஈக்களுக்குப் பற்கள் இல்லை.
- ☆ வண்ணத்துப் பூச்சிகளுக்கு வாய் இல்லை.
- ☆ தேளுக்குக் காதுகள் இல்லை.
- ☆ மண்புழுவுக்குக் கண்கள் இல்லை.
- ☆ பறவைகளுக்குப் பற்கள் இல்லை.
- ☆ கழுகு எதையும் கொன்று தின்பதில்லை.
- ☆ வௌவால் முட்டையிடுவதில்லை.



# படி ஏறும் சக்கர நாற்காலி!



படிக்கட்டுகளில் ஏறக்கூடிய ரோபோ சக்கர நாற்காலியை ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். மாற்றுத் திறனாளிகள், வயதானோர், நோயாளிகள் பயன்படுத்தும் விதத்தில், ஜப்பானின் சிபா தொழில்நுட்ப மைய பொறியியலாளர்கள் ரோபோ சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளனர். இந்த சக்கர நாற்காலி, சாதாரண சக்கர நாற்காலியைப் போல் நான்கு சக்கரங்களை கொண்டதுதான் என்றாலும், வழியில் படியோ அல்லது பள்ளமோ காணப்பட்டால் இந்த நாற்காலியின் சக்கரங்கள் கால்கள்போல் வடிவம் மாறி படி ஏறி விடும். வழியில் உள்ள தடைகளையும் தண்டி விடும். இந்த சக்கர நாற்காலியை பயன்படுத்துபவர்கள், ஜாய்ஸ்டிக் கருவி கொண்டு இதை இயக்கலாம்.



ஒரு மரவட்டை தன் கால்கள் அடிக்கடி வலிப்பதாக ஓர் ஆந்தையிடம் கூறி, "என்ன செய்யலாம்?" என யோசனைக் கேட்டது.

அதற்கு ஆந்தை, "உனக்கோ நிறைய கால்கள், நீ எலியாக மாறினால் நான்கு கால்கள் மட்டுமே இருக்கும். வலியும் 1/24 பங்குதான் இருக்கும்" என்று கணக்கிட்டுக் காட்டியது.

"நல்ல யோசனைதான். ஆனால் எப்படி எலி ஆவது?" என்று மரவட்டை கேட்டது.

# திட்டம் தீட்டும் வேலை



"திட்டம் தீட்டும் வேலைதான் என்னுடையது. ஆனால் அதை எப்படி நடைமுறைப் படுத்துவது என்று கேட்டு என்னைத் தொந்தரவு செய்யாதே" என்றது ஆந்தை சற்று வெறுப்புடன்.


# விளம்பர நாயகன்




டேவிட் மக்ளீன் 1995ஆம் ஆண்டு நுரையீரல் புற்றுநோயால் இறந்தபோது யார் இந்த டேவிட் மக்ளீன் என்ற கேள்வி எழுந்தது. அவர் ஒரு நடிகர் என்பதைவிட மார்ல்ப்ரோ சிகரெட் விளம்பர நாயகன் என்றால் சுலபமாகப் புரியும். இவருக்குப் புற்றுநோய் என்பது தெரிந்தவுடன் புகைப்பது உடல் நலனுக்குத் தீங்கானது என்ற பிரசாரத்தில் தீவிரமாக இறங்கினார். அவர் நடித்து வந்த சிகரெட் நிறுவன விளம்பரத்தையும் குறைத்துக் கொண்டார். அவர் நடித்த "டெத் இன் தி வாலி" என்ற புகைபிடிப்பதற்கு எதிரான குறும்படத்தின் பிரதிகள் அனைத்தையும் மார்ல்ப்ரோ நிறுவனம் விலைக்கு வாங்கியது.

# நடிகையர் திலகம் சாவித்திரி

R.P. ராஜநாயஹம்



கமெராவிற்கென்றே வடித்த முகம் ஒன்று என்றால் அது சாவித்திரியின் முகம் தான்!

சாவித்திரிக்கு சிவாஜி போலவே ஒவ்வொரு காலகட்டத்திலும் உடல் அமைப்பில் மாறுபாடு உண்டு. தேவதாஸ், மிஸ்ஸியம்மா, மாயாபஜார் சாவித்திரி ஒரு வகை அழகு. களத்தூர் கண்ணம்மா, பாசமலர், பாவமன்னிப்பு, பாத காணிக்கை, காத்திருந்த கண்கள் போன்ற படங்களில் வரும் சாவித்திரி வேறு வகை அழகு.

அப்புறம் பூஜைக்கு வந்த மலர் படத்தில் வரும் குண்டு சாவித்திரி. திருவருட்செல்வர் படத்தில் "ஊதிப்பெருத்த" சாவித்திரி. பின்னர் அம்மா கதாபாத்திரங்களில் மெலிந்த ஒல்லி சாவித்திரி.

சாவித்திரி மட்டுமே அனைத்து நடிகைகளிலிருந்தும் வித்தியாசமானவர்! நடிகைகள் அனைவரிலும் மேலான திறமை கொண்டவர் தான் சாவித்திரி. பத்மினி, சரோஜாதேவி, தேவிகா இந்த வரிசையில் முதலிடம் சாவித்திரிக்குத் தான்.

வேற்று மொழிப்பெண்கள் தமிழ் திரையில் அன்று நிகழ்த்திய கண்ணிய சாதனை மகத்தானது. முழுக்க ஹீரோ நடிகர்களின் ஆக்கிரமிப்பின் காலத்தில், ரசிகப்பெருமக்களும் அந்த நடிகர்கள் பற்றிய பிரமிப்பில் இருக்கின்ற நிலையில், பெண் கதாபாத்திரங்களை ஏற்று நடித்த அன்றைய சாவித்திரி, பத்மினி, சரோஜாதேவி, தேவிகாவெல்லாம் உயர்ந்த கலாபூர்வ நளினத்தை வெளிப்படுத்தினார்கள்.

சாவித்திரி தன் துணை யாரென்று ஆரம்ப காலத்திலேயே, 16 வயதிலேயே தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்திருக்கிறார். அதிலும் சாஸ்திரப்படி இரண்டாவது மனைவி அந்தஸ்தில், சம்பிரதாய வரிசைப்படி மூன்றாவது தாரமாக வாழ்க்கைப்பட்டவர். ஜெமினி கணேசனுக்கு அப்போது 32 வயது! (படிப்பதற்கே தலை சுற்றுகிறதென்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.)


சில வருடங்கள் ரகசியமாக அந்தத் திருமணத்தைப் பேணிக்காக்க வேண்டிய சூழ்நிலை வேறு! தலைமறைவுத் தாம்பத்தியம். இதற்கு அவருடைய வளர்ப்பு தகப்பன் சௌதுரி மட்டும் காரணமல்ல. ஜெமினிகணேசன் காந்தர்வத்திருமணம் (எவ்வளவு யோசித்தும் வேறு வார்த்தை கிடைக்கவில்லை.) செய்து கொண்ட பிரபல நட்சத்திரம் புஸ்பவல்லியும் தான் காரணம். முதல்மனைவி பாப்ஜி அமைதியாக வேடிக்கை பார்த்தாலும் கூட புஸ்பவல்லி கடுமையான குரோதத்தை சாவித்திரி மீது காட்டினார். தான் ஓட்டி வந்த காரை இவர் மீது ஏற்றிக் கொல்லத்துணிகிற ஆவேசம், துவேசம் புஸ்பவல்லிக்கு இருந்தது.

1952இல் மனம்போல் மாங்கல்யம் படத்தில் நடித்துக்கொண்டிருந்த காலத்தில் சாவித்திரிக்கு திருமணம். ஏற்கனவே ஜெமினி கணேசனுக்கு 1951செப்டம்பர் 22இல் புஸ்பவல்லியோடு தொடர்பு ஏற்பட்டு விட்டது. புஸ்பவல்லிக்கு 1954இல் ரேகாவும் 1955இல் ராதா என்ற பெண்ணும் பிறந்த நிலையில் அந்த வருட கடைசியில் ஜெமினி - புஸ்பவல்லி உறவு முடிவுக்கு வந்தது. 1956இல் தான் சாவித்திரியுடன் ஜெமினி திருமண உறவு வெளித்தெரிந்தது.

இவ்வளவிலும் சாவித்திரியின் நடிப்புத்திறமை ஜுவலித்த மாயம் தான் பெரிய விஷயம். Director's delight என்றே பெரிய இயக்குனர்கள் வாய்விட்டுச் சொன்னார்கள். பிரமிக்க அடிக்கிற நேர்த்தியான நடிப்பு. எந்த ஹீரோ நடித்தாலும், படத்தின் பெரும்பகுதியையும் ஹீரோ ஆக்கிரமித்தாலும் சாவித்திரி தன் விஷேச நடிப்பால் புறந்தள்ளி விடுவார்.

சாவித்திரி தெலுங்குப்பெண். ஆனால் தமிழ் பேசுவது ரொம்ப கச்சிதம். சிவாஜி கணேசனுக்கு இணையாக ஏன் இன்னும் கூடிய அளவில் தமிழ் உச்சரிப்பு சிறப்பாகவே இருக்கும். ஆனால் சிவாஜி ஒரு தெலுங்குப் படத்தில் (பெம்புடு கொடுகு) நடித்தபோது "Ganesan's Telugu pronunciation is horrible" என்று அங்கே ஒரு பத்திரிகையில் (Kinema, Dec 1953 issue) எழுதினார்கள். நடிகர் திலகத்தை விட நடிகையர் திலகம் எத்தகைய திறமை வாய்ந்தவர்!

சரோஜாதேவி தனக்கு கிடைத்த வாய்ப்புகளால் சாவித்திரியை மிஞ்சிவிட முடிந்தாலும் அவருடைய திறமையான நடிப்பை நெருங்க முடிந்ததில்லை.



சாவித்திரி ஆறு படங்கள் இயக்கியவர். ஜெமினி, வாணிஸ்ரீ யுடன் நடித்த "குழந்தையுள்ளம்", ("முத்துச் சிப்பிக்குள்ளே ஒரு பூவண்டு, துயில் கொண்டதே இன்பத் தேனுண்டு" என்ற ஆரம்பகால எஸ்.பி.பி பாடல் இந்தப்படத்தில் தான்!) சிவாஜியுடன் இவர் நடித்த"பிராப்தம்" (சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்!) இரண்டு படங்களும் சாவித்திரியே இயக்கியவை தான்.

1969இல் ஜெமினி கணேசனும் சாவித்திரியும் பிரிந்து விட்டார்கள்.

சாவித்திரி தமிழில் எடுத்த "பிராப்தம்" படமும் தெலுங்கில் எடுத்த "விண்ட சம்சாரம்" படமும் இவர் பொருளாதாரத்தை சிதைத்து வாழ்வு தடம்புரளக் காரணமாகிவிட்டது.

ஒரு மனுஷியாக saint என்று தான் சொல்லவேண்டும். சொத்துக்களை இழந்து, ஹபிபுல்லா ரோட் பங்களாவை இழந்து, அண்ணா நகர் வீட்டில் இருந்த போதுகூட அவர் செய்த உதவிகள் பற்றி தெரிய வரும்போது ஆச்சரியம் தான் மிஞ்சுகிறது.

ஒரு ரசிகர். தினமும் நூறு ரூபா மணியோடர் சாவித்திரிக்கு செய்து வந்தவர். திடீரென்று ஒரு நாள் தன் தொழிலில் நொடித்துப்போய் சாவித்திரியைக் காண வந்து தன் நிலையை சொல்கிறார். 6000 ரூபா இருந்தால் மீண்டும் தொழிலை தொடங்கமுடியும். வீட்டில் உள்ள தன் ஷீல்டுகள் எல்லாவற்றையும் ஒரு சேட்டுக் கடையில் விற்று 10000 ரூபா அந்த ரசிகருக்கு கொடுத்தவர்.

அண்ணாநகர் வீட்டுக்கு இவருடைய பழைய ட்ரைவர் ஒருவரின் மகள் வருகிறார். தன்னுடைய விலையுயர்ந்த சேலையை எடுத்து வீட்டு முன் இருக்கிற ரிக்ஷாக்காரனிடம் கொடுத்து விற்று வரச்சொல்லி, கிடைக்கும் பெருந்தொகையான பணத்தை அந்தப்பெண்ணின் திருமணச்செலவுக்கு கொடுக்கிறார்.

எம்.ஜி.ஆருடன் மகாதேவி, வேட்டைக்காரன், பரிசு ஆகிய படங்கள். சந்திரபாபு தயாரித்து இயக்கி, வாழ்க்கையைப் பாழாக்கி, முடியாமல் நின்று போன "மாடி வீட்டு ஏழை"யில் கூட எம்.ஜி.ஆருக்கு ஜோடி சாவித்திரி தான்.

சிவாஜியோடு ஜோடியாக அமரதீபம், வணங்காமுடி, அன்னையின் ஆணை, காத்தவராயன் தொடங்கி ரத்தத்திலகம், கை கொடுத்த தெய்வம், நவராத்திரி, திருவிளையாடல் தாண்டி பிராப்தம் வரை சாவித்திரி!

ஜெமினி கணேசன் தான் சாவித்திரிக்கு மிகப்பொருத்தம் என்று இன்றும் "யார் யார் யார் அவள் யாரோ ஊர்பேர் தான் தெரியாதோ" "காலங்களில் அவள் வசந்தம்" காற்று வந்தால் தலை சாயும் நாணல்" போன்ற பாடல்கள் சாட்சி சொல்கின்றன.

சாவித்திரியின் Rash car driving பற்றி பலரும் இப்போதும் பலர் நினைவில் வைத்திருக்கிறார்கள். அவருடைய குடிப்பழக்கம்.... மிகத்தேர்ந்த நடிகை சொந்த வாழ்க்கையில் வேஷம் போடத் தெரியாதவராயிருந்திருக்கிறார்! ஒன்றரை வருடங்கள் கோமாவில் கிடந்து சாவித்திரி இறக்க வேண்டியிருந்திருக்கிறது. அப்போது 46 வயது.

இந்திய அரசாங்கம் 08-03-2009இல் ஒரு தபால் முத்திரை சாவித்திரிக்கு வெளியிட்டது. இந்த விஷேச கௌரவம் ஹிந்தி நடிகைகள் தேவிகாராணி, மீனாகுமாரி ஆகியோருக்கும் கிடைத்திருக்கிறது.




# யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை (வல்வெட்டித்துறை)

## எமது பாடசாலை...

19ஆம் நூற்றாண்டின் சமூக மாற்றத்தின் வழியே உதயமான பாடசாலைகள் இலங்கை வரலாற்றில் முக்கியம் வாய்ந்தவை. ஆறுமுக நாவலர் பாரம்பரியத்தின் தொடர்ச்சியைப் பாதுகாக்க முனைந்த உள்ளூர் ஆளுமைகள் பல. சைவம், தமிழ் என்பவற்றின் பெருமையைப் பாதுகாக்க அமைத்துக் கொண்ட பாடசாலைகளில் ஒன்றே யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை.

அந்தக் கால சமூக மாற்றத்தின் பயனாய் ஆங்கிலக் கல்வி உயர்வை கருத்திலெடுத்து பல பாடசாலைகளின் தோற்றத்தின் பின்புலத்தில் 1904 ஆம் ஆண்டில் சைவத தமிழ் பாரம்பரியத்தினை நிலைநிறுத்தும் வகையில் சைவச் சான்றோனாக விளங்கிய திரு மிகு தையல் பாகனார் என்பவரால் தாபிக்கப்பட்ட பாடசாலை இதுவாகும். வடமாகாணத்தில் வடமராட்சி வலயத்தில் பருத்தித்துறைக் கோட்டத்தில் தரம்- II வகைப் பாடசாலையாக (தரம் 1-11) விளங்கும் இப்பாடசாலை யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் அக்காலத்தில் புகழ்பூத்து விளங்கிய தலைமை ஆசிரியர்களான புற்றளைச் சின்னையா உபாத்தியாயர், திரு. T.K. அருணாசலம், திரு. வீரகத்தி, வல்வெட்டி திரு. க. வல்லிபுரம், அல்வாய் திரு. வ. ஆறுமுகம், திரு. சி. கணபதிப்பிள்ளை, அல்வாய் திரு. சு. கணபதிப்பிள்ளை (சுகணா), திரு. சி. நல்லதம்பி போன்ற ஆரம்ப கால அதிபர்களின் வழிகாட்டலால் சிறந்து விளங்கியுள்ளது.

மரபுவழிப்பட்ட அதிபர்களிற்கு பின்னே காலமாற்றத்தால் உந்தப்பட்ட மாற்றங்களை நிறைவேற்றும் வகையில் பணியாற்றிய திரு. சி. நல்லதம்பி, திரு. ஆ. சுப்பிரமணியம், திரு. R. இராசாமணி, திரு. த. தவேந்திரராசா போன்ற அன்றைய அதிபர்களும் இன்றைய அதிபர் திரு. ஆ. சிவநாதன் அவர்களும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாளர்களாக பாடசாலை வரலாற்றில் நிலைத்து விட்டனர்.

'சுனாமி' ஆழிப்பேரலையின் அசுரத்தாண்டவத்தால் இந்தப் பாடசாலை வழித்துத்துடைக்கப்பட்ட காலத்துக்கு பின்னர் இன்னொரு வரலாறு ஆரம்பிக்கப்படுகிறது. சுனாமிக்காலத்திலும் அதன்பின்னர் ஏற்பட்ட மீள் நிர்மாண முயற்சிகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் வேகமானபணி புரிந்த அதிபர் திரு. த. தவேந்திரராசா அவர்கள். பல்வேறு பணி நிறுவனங்களின் உதவியுடன் புனரமைக்கும் வேலைகளில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். பாடசாலை மாணவர்களை சிவன்கோயில் வீதியிலுள்ள ஒரு குடியிருப்பாளர் வளவிலும், சிவன்கோயில் மடத்து மண்டபத்திலும், நகராட்சி மண்டபத்திலும் இயங்கவைத்து பணிபுரிந்தமை நினைவிலிருத்த வேண்டியது.


சுனாமியின் வடுக்களுடனும், பாரிய உட்கட்டமைப்பு மீள்நிர்மாணச் சவால்களுடனும் அதிபர் பணியைப் பொறுப்பேற்றவர் இன்றைய அதிபர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள். மீளவும் பாடசாலைக்குரிய இடத்தில் மீள்நிர்மாணம் பெற்ற கட்டடங்களில் பாடசாலையை நிர்வகிப்பதில் இவர் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார். இன்றைய அதிபரின் முயற்சியினாலும் குறிப்பாக பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், சுனாமி அனர்த்த நிவாரண அமைப்பு, பல சமூக நிறுவனங்கள் செய்த, செய்கின்ற உதவிகள் குறிப்பிடத்தக்கன.

2008.09.06 இல் ஆறு வகுப்பறைகளுடன் கூடிய புதிய கட்டிடம் யாழ் அலுவலக UNICEF தலைவர் Dr. தயானி அராக்கி அவர்களால் திறந்துவைக்கப்பட்டு மீண்டும் பாடசாலைக் குரிய இடத்தில் கொணர்ந்தார். இவ்வாறான இடநெருக்கடிகளிலும் கண்காட்சி, பரிசளிப்புவிழா, இல்ல விளையாட்டுப் போட்டி போன்றன திறம்பட நடைபெற்றன. பின்னர் 2010 இல் ஆரம்பிக்கப்பட்ட கட்டடவேலைகளின் பயனாக 13 வகுப்பறைகளையும், கணனிக்கூடம், ஆய்வுகூடம், நூலகம், கட்புலசெவிப்புலகூடம், வழிபாட்டுக்கூடம், மலசல கூடங்கள் என்பவற்றை எல்லாம் உள்ளடக்கிய மிக வசதி வாய்ந்த கட்டடத்தொகுதி 2011.06.03 இல் உருவானது. இக் கட்டடத்தொகுதி 2011.07.18இல் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி Reza Hossaini என்பவரால் சம்பிர தாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடங்கள் 'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியீட்டத்துடனும், 'யூரோவில்' நிறுவனத்தாரின் நிர்மாண வேலைத்திட்டங்களுடனும் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


தேசிய போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம் அங்குரார்ப்பண விழா 2012 கல்வி அமைச்சர் வருகை.

சிவகுரு வித்தியாசாலையின் சாதனைகள் அதிகம். 107வது வருடத்தை தாண்டும் நிலையில் அச் சாதனைகளைப் பதிவாக்குவது ஒரு தனி முயற்சியாகிவிடும். பாடசாலை மாணவர்கள் மாவட்ட , மாகாண, தேசியமட்டங்களில் பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர். நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, விளையாட்டுக்கள், தமிழ் தின ஆங்கில தினப் போட்டிகள் யாவிலும் மாணவர்கள் காட்டும் திறமைகள் முக்கியமானவை. 2011ல் செல்வன். வினோத் தட்டெறிதலில் தேசியமட்டத்திற்கு தெரிவாகினார். 2012 இல் தேசிய மட்ட நிகழ்வான பாடசாலை போசாக்கு நிகழ்வினையும் சிறப்பாக நடத்தி பெருமை சேர்த்துள்ளது.

ஆற்றல் மிக்க மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையின் அர்ப்பணிப்புள்ள அதிபர், கடமை உணர்வுமிக்க ஆசிரியர்கள் ஆகியோரின் சேவைகளுக்கு அப்பால் மேலும் பல உதவிகளை நாடி நிற்கின்றது. அடிக்கட்டுமானவசதிகள் மாத்திரமன்றி மாணவர்களின் மென்திறன் விருத்தி, சமூகத்திறன் விருத்தி, பிரதேச பொருளாதார முறையில் மாணவர்களை தொழிற்பயிற்சி நோக்கி திசைமுகப்படுத்துதல், வறிய மாணவர்களின் நலச்சேவைகள் எனப்பல தேவைப்பாடுகளுடன் இயங்கும் இந்தப் பாடசாலைக்கான உதவிகள் மேலும் பாய்ச்சப்படும் நிலையில் சாதனைகளால் இது உயர்வடையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.


மாணவன் செல்வன் ஸ்ரீ.வினோத் அவர்களுக்கு பரிசில் வழங்கும் போது...



## அதிபர் திரு. ஆ. சிவநாதன்

(B.A , M.Ed, SLPS 2-II)

மாணவர்களின் ஒழுகத்தை ஆன்மிகரீதியில் வழிப்படுத்தவல்லவராகவும் பொருளியல் துறை நிபுணத்துவம் மிக்கவராகவும் விளங்குகின்ற இந்த அதிபரின் சமூகத் தொடர்பின் விகசிப்பினால் பாடசாலை மேலும் விருத்தி பெற்று வளர்ந்து செல்கின்றது. திட்டமிட்ட முறையில் பாடசாலையின் பௌதிக. மனித வள விருத்தியில் கவனம் செலுத்தி நீண்ட கால நோக்கில் மாணவர்களின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு செயற்படுபவர். சுனாமியினால் முற்றாக அழிவடைந்து தற்காலிகமாக வேறு இடத்தில் வசதிகளற்று இயங்கிய வேளை தனது அதிபர் பதவியில் முதல் பாடசாலையாக பொறுப்பேற்று நிதானமாக ஒவ்வொரு விடயத்திலும் கவனம் செலுத்தி ஆசியர்களை வழிப்படுத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தி பாடசாலை. கோட்ட, வலய, மாவட்டமாகாண மட்டப் போட்டிகளில் பங்கெடுக்கச் செய்துள்ளார். 2011 இல் தேசியமட்ட விளையாட்டுப்போட்டியில் மாணவன் ஒருவன் பங்குபற்றியமை இப்பாடசாலை வரலாற்றில் முக்கியமான நிகழ்வாகும். தொடர்ந்து பெற்றோர்களை , பழைய மாணவர்களை .சமுக நிறுவனங்களை .பாடசாலை நலன் விரும்பிகளை பாடசாலையின் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைத்து பாடசாலை மேம்பாட்டில் பங்கெடுக்கச் செய்துள்ளார். கல்வி, ஒழுக்கம், இணைபாடவிதான செயற்பாடுகள் இணைந்த சமுகத்திற்கேற்ற நற்பிரஜையாக்குதல் எனும் தெளிந்த நோக்கோடு செயற்படும் இவரது சேவை அளப்பரியது.





பாடசாலை ஆசிரியர் குழாம்

# காங்கேசன்துறை வீதி அகலிப்பின்போது பொதுமக்கள் கவனிக்க வேண்டியவை

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான "ஏ" தர வீதியாக யாழ். காங்கேசன்துறை வீதி இருப்பதனால் பொது வழிகள் சட்டத்தின் பிரகாரம் இதற்கான கட்டிடஎல்லை வீதியின் மத்தியிலி ருந்து 50' (15மீ)க்கு அப்பால் அமைக்கப்பட்டவேண்டும்.

தற்போதைய வீதி விஸ்தரிப்பின் போது ஏற்கனவே வீதிக்குச் சமீபமாக இருக்கும் கட்டடங்கள் மத்தியிலிருந்து 7.5 மீ தூரம் வரை இடித்து அகற்றும் போது அதனால் வீட்டின் பாதுகாப்புக்கு பாதகமாக அமையக்கூடிய பகுதிகளை மறைப்பதற்கான கட்டுமான வேலைகளை மட்டும் மேற்கொள்ளலாம். இவ்வாறான திருத்த வேலைகளின் போது வீதியின் மத்தியிலிருந்து 50' (15மீ) எல்லைக்குள் புதிய நிரந்தர தூண்களோ வேறு புதிய நிர்மாண வேலைகளோ மேற்கொள்ளலாகாது.

மேலும் எதிர்கால அபிவிருத்தி வேலைகள் (வீதி, மின்சாரம், நீர்வழங்கல், தொலைத்தொடர்பு, வடிகால்கள்) தொடர்பாக அகலிப்புக்கான தேவைகள் ஏற்படும் இடத்து தேவைக்கேற்ற அளவில் மீண்டும் இந்தக் கட்டுமாணங்கள் அகற்றப்பட நேரிடும்.

வீதி அகலிப்பின் போது 7.5 மீற்றர் வரை அகற்றப்பட்ட தொகுதிக்காக தனிக்கட்டடங்கள் மாடிக் கட்டடங்களாக கட்ட வேண்டிய தேவை ஏற்படின் மாடிக் கட்டடத்திற்கான நிர்மாண வேலைகள் வீதியின் மத்தியிலிருந்து 15 மீ (50')க்கு அப்பால் மட்டுமே அமைக்கப்படவேண்டும் என்று யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

# இராஜகோபுர கும்பாபிஷேகம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி ஸ்ரீ கண்ணகாம்பிகா தேவஸ்தான அதிசுந்தர திருதியதள நூதன இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் 29ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று அதிகாலை 5.32க்கு ஆரம்பமாகும் விநாயக வழிபாட்டுடன் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகின்றன. திங்கட்கிழமை காலை பஞ்சசுத்தியை தொடர்ந்து யாகபூஜை, சமர்ப்பணங்கள் தானாதிகள் பலிகள் என்பவற்றோடு மணிக்கோபுர கும்பாபிஷேகம் நடைபெறும் காலை. 9.25 முதல் 10.56 மணிக்குள் அதி சுந்தர இராஜகோபுர விமான மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மாலை விசேட பூசைகளுடன் அம்பாள் திருவீதிஉலாவும் இராஜகோபுரதரிசனத் திருவருட் காட்சியும் நடைபெறும்.

சிவசக்தி ஸ்ரீ ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் இக் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது. (இ)



திவிநெகும திட்டத்தின் கீழ் அரியாலை தென்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வீட்டுத்தோட்ட பயிற்செய்கைக்கான விதைகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் பயனாளி ஒருவருக்கு நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித்தலைவரும், ஈ.பி.டி.பியின் நல்லூர்பிரதேச அமைப்பாளருமான ஆ. இரவீந்திரதாசன் விதைகள் அடங்கிய பொதியை வழங் குவதைக் காணலாம்.

# தீயில் எரிந்து வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஏ.வி.றோட் அரியாலை யைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை பீற்றர் பெனடிக்ற் (வயது 79) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். இவர் கடந்த 05ஆம் திகதி தீக்காயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# இழப்புக்கள் எமக்கு புதியவையல்ல; மீள்வதும் எமக்குத் தெரியாததல்ல!

## - கைவேலி விவசாயி பெருமிதம்

(புதுக்குடியிருப்பு)

வாழ்க்கையில் நிகழ்ந்து விட்ட துயரமான சம்பவங்களை நினைத்து வருந்துவதை விட, இனி வாழப்போகும் காலத்தை எவ்வாறு மேம்படுத்தி முன்நிலைக்கு வரமுடியும் என்பதைக் குறித்து பாரிய இழப்புக்களைச் சந்தித்த எங்கள் வன்னிமக்கள் இனிச் சிந்தித்துச் செயலாற்ற முன்வரவேண்டும் என புதுக்குடியிருப்பு - கைவேலி 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசையா தங்கராசா (வயது- 53) எனும் விவசாயி தெரிவித்தார்.

கொட்டும் அடைமழையிலும் தனது வளவினுள் வாழைக்குட்டிகள் மற்றும் தென்னங்கன்றுகளை நட்டுக்கொண்டிருந்த இவர், தொடர்ந்து மேலும் தெரிவித்ததாவது;

கடந்துபோன துயரமான சம்பவங்களை மனதிலே தேங்கி வைத்துக்கொண்டு நாளாந்தம் கவலைப்படுவதைவிட, இனிநடக்கஇருக்கும் சம்பவங்கள் நல்லதாக, வளமாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தோடு, எல்லோரும் செயலாற்ற முனைந்தால்தான் நாம் முன்பு வாழ்ந்த ஒரு மேன்மையான நிலைக்கு வரமுடியும்.

கடந்த காலப்போர் அனர்த்தத்தின்போது ஏற்பட்ட இழப்புக்கள் பாரதூரமானவை. இந்த இழப்புக்கள் எனக்கு மட்டுமல்ல, ஊரோடு ஒத்ததாக இருக்கும் போது அந்த இழப்புக்கள் குறித்து நான் மட்டும் வருந்திக் கொண்டிருப்பதில் எந்தவித பலனுமில்லை.

வளவினுள் அழிந்துபோன பயிர்பத்தாளைகளை திரும்பவும் அவரவர் தங்கள் பிரயாசையின் மூலம் மீண்டும் உருவாக்கி, எமது இடங்களை வளம்மிக்கதான பயன்தரக்கூடியதான இடமாக மாற்றவேண்டும். அப்பொழுதுதான் நாம் வாழ்ந்து காட்டியவர்களாக இருப்போம். இழப்புக்கள் எமக்குப் புதியவை அல்ல. அதிலிருந்து மீள்வதும் எமக்குத்தெரியாத தொன்றல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இவரது வளவினுள் ஆங்காங்கே தோடை, எலுமிச்சை,தூதுவளை, அகத்தி, மாதுளை போன்ற பயன்தரு மரங்கள் உண்டாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (138)



# பதிவிறக்கப் பெட்டகம்

தேசத்தின் ஒழுக்கமாக மனிதனுக்குப் புகட்டப்படுவது நாட்டுப்பற்று. சமூகத்தின் ஒழுக்கமாக ஆதிக்கவாதிகள் புகட்டிக்கொண்டிருப்பது பெண்களுக்கென்றேயான கற்பு. இரண்டுமே முற்றமுழுக்க கற்பிதங்கள்தாம். வெல்லற்கரிய வல்லரசாக சோவியத் யூனியனை மாற்றியவர், இன்று அது சிதறுண்டு போகவும் கணிசமான அளவு காரணமாகச் சொல்லப்படுபவர் ஜோசப் ஸ்டாலின். ஒரு சட்டத்தால் ருஷ்ய மொழியை சோவியத் ஒன்றியத்தின் தேசிய மொழியாக்கிய ஸ்டாலின் ருஷ்யர் அல்லர்; மாறாக, ஜோர்ஜியர். இன்று அவர் உயிரோடிருந்தால், ஷெவர்நாட்சேயைத் தலைவராகக் கொண்ட ஜோர்ஜியாவின் குடிமகனாகியிருப்பார். யெல்த்ஸினின் ருஷ்யாவுக்கு அவர் அந்நியர். நாட்டுப்பற்று என்பது கற்பிதமல்லாமல் வேறென்ன? தேசத்தின் எல்லை மனிதன் விதைத்த முள்வேலிதான். மண்ணிலே எல்லை கட்டும் இந்த கற்பிதத்தை விட மேலானவை மனித உறவுகள். அதனால்தான் சொன்னான்: "எல்லாம் என்னுடைய ஊர்தான்; எல்லாரும் என்னுடைய உறவினர்தான்" என்று கணியன் பூங்குன்றன். உங்கள் தேசபக்தி பட்டம் வழங்குமானால் அவன்தான் முதல் தேசத்துரோகி! – **கவிதாசரண்**

ஊடக சுதந்திரம் என்ற வெற்றுக்கோஷத்தின் பின்னால் இருந்துகொண்டு அதையே கேலிக்கூத்தாக்கும் செயல்களில் ஈடுபடுவது அந்த சுதந்திரத்திற்கு நிச்சயம் ஆபத்தையே விளைவிக்கும். – **சுதானு குரு**

இன்றைய நமது காலத்தின் மாபெரும் சாதனை இதுதான்: யார் ஒருவர் கொள்கைப்பிடிப்பின் பெயராலோ அல்லது ஒரு இலட்சியத்தின் பெயராலோ கொலை புரிகிறார்களோ அவர்களுடைய அந்த நடவடிக்கை, சட்டத்துக்குப் புறம்பானதல்ல என்று அந்த இயக்கத்தின் தொண்டர்கள் கருதுகிறார்கள். – **ஸீக்ஃப்ரீட் லென்ஸ்**

தமது நிலைக்குச் சூழ்நிலைகளைக் குற்றங் கூறுவது மக்களின் வழக்கம். எனக்குச் சூழ்நிலைகளில் நம்பிக்கை இல்லை. தமக்கு வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்று தேடிப்பார்த்து அவற்றை உபயோகிப்பவர்களும், அவை இல்லாதவிடத்துத் தாமே தமக்கு வேண்டிய சூழ்நிலைகளை உண்டாக்கிக் கொள்பவர்களும்தான் இவ்வுலகில் முன்னேறுகிறார்கள். – **பேணாட் ஷோ**

ஒரு குழுவினரோ, வர்க்கத்தினரோ மனிதகுலத்தின் மீது அடிமைத்தனத்தைத் திணிப்பது அநீதியான செயல். அவர்கள் பக்கம் சில நல்லவர்களும் இருக்கலாம். ஆனால் எல்லா நல்லவர்களுக்குமே தெளிவும் தீர்க்கதரிசனமும் இருக்குமென்று சொல்லிவிட முடியாது. பலசமயம் அவர்கள குழம்பிப் போனவர்களாக இருக்கிறார்கள். என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே அவர்கள் அநியாயத்திற்குத் துணைபோய்விடுகிறார்கள். – **ஓஷோ**

நியாயமற்ற வழிகளின் மூலம் மனிதன் வளர்ச்சியடையலாம்; அவனுக்குத் தேவை போலக் காணப்படுவனவற்றையும் பெற்றுவிடலாம்; அவன் பகைவர்களையும் அழிக்கலாம். ஆனால், அதேநேரத்தில் அவனுடைய வேரிலேயே அவன் அழுகிவிடுகிறான். – **தாகூர்**

தொடர்பாடல் என்பது ஒருவழிப் பாதையாக இருக்க முடியாது. அவ்வாறிருந்தால் அது அறிவுறுத்தல், ஆணையிடுதல் என்றாகிவிடும். தொடர்பாடல் என்பது சொல்பவர் – கேட்பவர் என்ற ஒரே வழிப் பாதையாக அமையாமல், சொல்பவரே கேட்பவராகவும், கேட்பவரே சொல்பவராகவும் மாறிமாறி அமைகிற நிகழ்வில்தான் சரியான கருத்துப் பரிமாற்றம் நடைபெறும். பேசுவது மட்டுமல்ல செவிமடுத்தல் என்பதும் ஓர் அருமையான கலை. புரிந்துணர்வையும் அறிவையும் வளர்க்கும் கலை அது. அதனால்தான் உலகைப் புரிந்துகொண்டு வெற்றிபெற வேண்டுமானால் வாயை மூடிக்கொண்டு கண்களையும் காதுகளையும் திறந்து வைத்திரு என்றார்கள். – **அசோகமித்திரன்**

பிற மனிதனை ஆக்கிரமிப்பது மனிதனின் அடிப்படைக் குணமாகிவிட்டது. தன்னுடைய குரல் ஓங்கி ஒலிப்பதை அவன விரும்புகிறான். தனக்குக்கிடைத்த பதவியை, ஸ்தானத்தை வைத்துக்கொண்டு பிறரை அடக்கி ஆள முற்படுகிறான். மனிதன் மிருக உணர்வுகளிலிருந்து விடுபடுவது கஷ்டமான காரியமாக இருக்கிறது. மனிதனை, முன்னேற்றமுள்ள மனிதனாக மாற்றுகிற வேலையை இலக்கியம் ஒரு முயற்சியாகச் செய்யவேண்டும். – **இந்திரா பார்த்தசாரதி**

பலநாட்டு சங்கீத முறைகளையும் தெரிந்துகொள்ள முயன்று வருகிறேன். இந்தக் கடலுக்குள் ஆழ்ந்து போகப் போக, எல்லாவிதமான இசைமரபுகளையும் இணைக்கும் ஒரு தொடர்புச் சங்கிலி புரிபடுகிறது. மனத்திலிருந்து பேதங்களெல்லாம் மறைய ஆரம்பிக்கின்றன.

– **உமையாள்புரம் சிவராமன்**

# தேவையான தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்; ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சுக்கு இடமில்லை

## கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன



(கொழும்பு)

ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கு தேவையான தீர்வைப் பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், அரசியல் ரீதியான செயற்பாடுகளைக் கொண்டு ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட மாட்டாது என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி ஆசிரியர் சங்கத்துடன் பிரதிக்கல்வியமைச்சர், கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவித்துள்ள அமைச்சர், பேச்சுவார்தையில் ஏற்படுத்தப்பட்ட இணக்கத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், ஆசிரியர் சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கை எனக் கூறியுள்ளார்.

ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைக்கு தீர்வுகாண அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் எனவும் அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான தீர்வைப் பெற்று கொள்வது என இணக்கம் காணப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக அனைத்து ஆசிரியர் தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சில காரணங்களை முன்வைத்து, ஆசிரியர் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதன் பின்னணியில் தெளிவான அரசியல் நோக்கம் இருப்பதாக அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# சட்டமூலத்திற்கு எதிராக மனு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்கூட்டிய நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதாக பல்கலைகழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி இதனை தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை உயர்நீதிமன்றில் குறித்த மனுவைத் தாக்கல் செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலத்தில் கல்விக்கு முன்னுரிமையளிக்கப்படவில்லை எனத் தெரிவித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பல்கலைகழக விரிவுரையாளர் சங்கசம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வில் சிறார்கள் பிரமுகர்களை வரவேற்று நிற்பதையும், அருட்தந்தை ஜோதிநாதன் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம்.

# புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரை நாடு கடத்தும் அவுஸ்ரேலியா

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரை நாடு கடத்த அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்னர் ஒரே ஒரு தடவை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரை அவுஸ்ரேலிய அரசாங்கம் பலவந்தமாக நாடு கடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெல்பர்னில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் புக்லிடக கோரிக்கையாளரே இவவாறு நாடு கடத்தப்படவுள்ளதாக, அவுஸ்ரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது. குறித்த இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் எதிர் வரும் 31ஆம் திகதி இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட உள் ளார்.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படகு மூலம் அவுஸ்ரேலியா சென்றடைந்த 40 வயது மதிக்கத் தக்க இலங்கைத் தமிழர் ஒருவரே இவ்வாறு நாடு கடத் தப்படவுள்ளார். கடந்த ஜூலை மாதம் தயான் அந்தனி என்ற இலஙகையர் ஒருவரை அவுஸ்ரேலியா நாடு கடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கத்தின் பாதிப்புகளில் இருந்து இலங்கையும் இனிமேல் தப்பமுடியாது

## நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நிலநடுக்கத்தின் பாதிப்புகளில் இருந்து இலங்கை இனிமேலும் நீண்டகாலத்துக்குத் தப்பிக் கொள்ள முடியாது என்று நிலநடுக்கத் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கக் கூடிய கட்டடங்களை வடிவமைப்பதற்கான வழிகாட்டு உபகுழுவின் தலைவர் சகபந்து தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இலங்கையின் தென்மேற்கு கரைக்கு அப்பால் 500 - 700 கி.மீ தொலைவில், இந்தோ - அவுஸ்ரேலிய புவித்தட்டில், பிளவு ஏற்பட்டுள்ளதாக அண்மைய புவியியல் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், புதிய புதிய தட்டு ஒன்று உருவாகி வருகிறது.

இதன்காரணமாக, எதிர்காலத்தில் நிலநடுக்கத்தினால் இலங்கையில் அதிகளவு பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

ஆவணப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், இலங்கையில் 1615ஆம் ஆண்டு பாரிய நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இதில், ஆயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அண்மைக்காலத்தில் நாம் பல நிலஅதிர்வுகளை உணர்ந்துள்ளோம். ஆனால் பாரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

ஆனால் எதிர்காலத்தில் கொழும்பு போன்ற நகர மையத்தின் அருகே நிலநடுக்கம் நிகழுமானால், தற்போதைய அபிவிருத்தி மற்றும் சனத்தொகையின் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்படும். என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# கேதாரீஸ்வரர் விரதம்

(தொடர்ச்சி...)

அத்தருணம் சென்று கொண்டிருந்த முனிவரைப் பார்வதி தேவி பார்த்து, "பிருங்கி முனியே, உனது உடம்பிலுள்ள இரத்தம் மாமிசம் என்பன எனது அம்சமாதலின் அவற்றைக் கொடு" எனக் கூறினார். முனிவர் உடனே தனது உடம்பிலுள்ள மாமிசம் இரத்தம் என்பவற்றை உதறிக் கொட்டிவிட்டார். அதனால் அவரது உடல் வலிமை நீங்கிவிட்டது. நிற்கமுடியாத நிலைமையேற்பட்டது.

வருத்தத்துடன் நிற்கின்ற பிருங்கி முனிவரைப் பாாத்து "உனக்கு இந்தநிலை ஏன் வந்தது?" என இறைவன் கேட்டார்.

அதற்கு பிருங்கி முனிவர், "சுவாமி, தன்னை விலக்கி தங்களைத் தனித்துப் பிரதஷிணஞ் செய்து வணங்கியதற்குத் தேவி தந்த தண்டனை இது என விண்ணப்பித்து நின்றார். பரமேஸ்வரன் கருணை கூர்ந்து ஒரு தண்டைக் கொடுக்க, அதனையூன்றுகோலாகக் கொண்டு தன் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார். பார்வதிதேவியார் தன்னை வணங்காத முனிவருக்குப் பரமேஸ்வரன் தண்டுகொடுத்து உதவிசெய்தாரே என்ற மிகுந்த சினம் கொண்டு திருக்கைலாசகிரியை விட்டுப் பூவுலகத்துக்கு வந்தார். வந்து கௌதம முனிவரது ஆசிரமத்தை அடைந்து ஒரு வில்வ மரத்தடியில் இருந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் மழையில்லாமையினால் எரிந்து கருகியிருந்த அந்த ஆசிரம நந்தவனத்து மரங்களெல் லாம் துளிர்த்துப் பூத்து எங்கும் நறுமணம் வீசின. அந்தப் பூங்கா மிகுந்த அழகுடன் விளங்கியது.

தர்ப்பை கொய்து வருவதற்காக வெளியே சென்று திரும்பி வந்த கௌதம முனிவர் தனது ஆசிரமத்து நந்தவனம் மிகுந்த பொலிவுடன் அழகு பெற்றிருக்கின்ற தன்மையைப் பார்த்து மிகவும் அதிசயத்தார்.

நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்து வரும்பொழுது வில்வமர நிழலில் உலகமாதாவாகிய பார்வதி தேவியார் அமர்ந்து இருக்கின்ற தன்மையைக் கண்டார். கண்டவுடனே அடியற்ற மரம்போலப் பூமியில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று, "தாயே!" திருக்கைலாச கிரியை விட்டு அடியேனது ஆசிரமத்துக்கு எழுந்தருளி வந்து காட்சியளித்தருளிய தன்மைக்குயான் என்ன தவம் செய்தேனோ?" என்று தோத்தரித்து வணங்கி நின்று "தாயே! தாங்கள் பூலோகத்துக்கு எழுந்தருளி வந்தது யாதோ?" எனக் கேட்டார். பார்வதி தேவி கைலாசத்தில் நடந்த சம்பவவங்களையெல்லாம் கூற முனிவர் கேட்டு அம்மையாரைச்சிம்மாசனம் ஒன்றில் எழுந்தருளச் செய்து வேண்டும் உபசாரங்கள் செய்து வணங்கி நின்றார்.

தொகுப்பு – விசிந்தன்.

பார்வதி தேவியார் கௌதம முனிவரை நோக்கி "தபோதநரே! யான் சிவபெருமானது வாமபாகத்திற் கலந்து கொள்ளும் பொருட்டு இப்பூவுலகத்தில் ஓர் விரதம் அநுட்டிக்க வேண்டும். மிகவும் மகத்துவம் நிறைந்த விரதமொன்றும், அதனை அனுஷ்டிக்கும் முறைமையும் உரைக்க வேண்டும்" எனக் கேட்டார். முனிவர் தாயே! பூவுலகில் அனுஷ்டிக்கப்படும் சிறந்த விரதம் ஒன்றுண்டு. கேதாரீஸ்வரர் விரதம் என்று அதற்குப்பெயர்" எனக் கூறி அதனை அநுட்டிக்கும் முறையையும் கூறினார்.(தொடரும்..)

# போலி கம்பனியுடன் மீள் காப்புறுதி; 208 மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

போலியான கம்பனி ஒன்றுடன் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் செய்துகொண்ட மீள் காப்புறுதி காரணமாக அதற்கு 208 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் அறிவித்திருக்கின்றார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் இந்த அறிக்கையை அரசாங்க நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழு(கோப்) கடந்த செவ்வாய்க்கிழமை ஆராய்ந்தது.

இந்த அறிக்கையை மேற்கோள்காட்டிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தொடர்பாக ட்ரான்ஸ் ஏசிய மெனேஜ்மன்ட் அட்வைஸர் என்ற போலி நிறுவனத்துடன் இந்த மீள் காப்புறுதி ஒப்பந்தம் செய்யப்பட்டது என நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் கம்பனி போலியானது என்ற தகவல் 2006இல் இணையத்தில் வெளியாகியிருந்தது என கோப் கூறியுள்ளது.

பிரதீப் காரியவசம், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்த போது இந்த போலி காப்புறுதி செய்யப்பட்டது என ஐ.தே.க. எம்.பி ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

பிரதீப் காரியவசம், பங்குச் சந்தை உட்பட பல விடயங்களில் விசாரிக்கப்பட்டு வருபவராக உள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் புனிதமானவை என ஏற்கப்பட வேண்டியதில்லை எனவும் கோப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமெனவும் சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம கூறினார்.

அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் பின் நிறைவேற்று அதிகாரமிக்கவருக்கு விசுவாசமானவரே கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்படுகிறார் என ஹர்ஷ டி சில்வா கூறினார்.

**வெளியீடு 05**

## வினாக்களுக்குரிய விடைகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

21. சுற்றளவு என்பது 4 பக்கங்களின் கூட்டுத்தொகை ஆகவே சதுரத்திற்கு 4 பக்கங்களும் சமன் என்பதால்
= 280 : 4 = 70 cm

22. 31 ஆவது பூச்செடி - லில்லி
∴ பிரிக்கும்போது 3 மீதி
வருவதால் 3 ஆவது பூஞ்செடியான லில்லி

$4 \overline{)31}$ = 7, 28, 3 மீதி

23. தந்தையின் வயது : மகனின் வயது
3 மடங்கு : 1 மடங்கு
42 வயது : $\frac{42}{3}$ = 14 வயது

∴ 1 புத்தகம் + 2 2 பேனா = 115/- (115/-x2=230/-)
∴ 2 புத்தகம் + 2 பேனா = 115/- x 2 = 230/-
24) இதிலிருந்து அழிறப்பரின் விலையைக் கண்டு பிடிக்கலாம் = 235/- - 230/- = 5/-

25) புத்தகத்தின் விலை = 105/- - 5/- = 100/-

26) பென்சிலின் நீளம்
= இறுதி வாசிப்பு - ஆரம்ப வாசிப்பு
= 9 cm - 2 cm

27) குவியலிலுள்ள தோடம்பழம் = 12 x 4 = 48
∴ 6 வீதம் கொடுத்தால் = 48 - 6 = 8 பேர்

28) முதலில் மொத்த இலக்கங்களை 4 ஆல் பெருக்குக.
= 16 x 4 = 64
இதிலிருந்து இலக்கங்களின் கூட்டுத்தொகையை கழிக்க
= 64 - 56 = 8
இதன் பின்னர் 8 ஐ 2 பிரித்து, வரும் விடையை 16 இலிருந்து கழிக்க.
= 8 - 2 = 4 = 16 - 4 = 12
∴ இலக்கம் 4 = 12 → 12 x 4 = 48
இலக்கம் 2 = 4 → 4 x 2 = 8
மொத்த இலக்கம் 16 — 56

29) விமானம் புறப்பட்ட நேரம் = மு.ப. 4.30
பயணித்த நேரம் = மு.ப 2.35
மு.ப 7.05


30) இங்கு பேனாவின் விலைக்கும், அழிறப்பரின் விலைக்கும் இடையே 7/- வித்தியாசம் இருப்பதோடு, இரண்டினதும் மொத்த விலை 23/- ஆகவே இருக்க வேண்டும்.
எனவே தரப்பட்ட விடையிலிருந்தே விடையைக் கண்டு பிடிக்கவும் = ரூ. 8/=

**வெளியீடு 06**


## வினாக்களுக்குரிய விடைகள்

(1) காலையில் சூரியன் கிழக்குத் திசையில் இருப்பதால், ஒருவரின் நிழல் மேற்கு திசையில் இருக்கும்.
∴ ஒருவர் எந்தத்திசையிலும் நடந்தாலும், அவரது நிழல் மேற்குத் திசையிலேயே விழும்.

(2)




(3)





= 5 + 3 + 3 + 5 + 6 + 6 = 28cm

(4) மொத்தக் கனவளவு = l ml
850
x 7
5l 950ml

(5) உண்மையான = மனிதனின் - ஆற்றின்
வேகம் வேகம் வேகம்
12 - 10 = 2km

(6)



= 8 கட்டம் ÷ 2 = 4 கட்டம்
∴ 1 கட்டம் = 2X2cm = 4cm²
∴ 4 கட்டம் = 4X4 = 16cm²

(7) சுவரின் பரப்பளவு = நீளம் X அகலம்
= 4 X 3
= 12m²

✦ தீந்தை பூச வேண்டிய சுவரின் பரப்பளவு
= 6 X 6 = 36cm²

✦ 12m² க்கு தேவையான தீந்தை = 2 லீற்றர்
∴ 36m² க்கு தேவையான தீந்தை
= $\frac{2}{12}$ X 36 = 6 லீற்றர்

(8) பின்வருமாறு கணிக்க... ..

∅ ∅ ∆̸ △ = 12 kg
- ∅ ∅ ∆̸ = 7 kg
△ = 5 kg

∴ △ = 5 kg எனில், ○ = 1kg ஆகும்
= △ + △ + △ + ○ = ?
= 5 + 5 + 5 + 1 = 16kg

(9) வர வேண்டிய நேரம் = ந.ப. 12.50
தாமதமாகிய நேரம் = 15 +
பி.ப. 1.05

குறிப்பு ⇨ விடையை 24 மணி நேர முறையில் குறிப்பிடக்கூடாது.

**எதிர்வரும் திங்கட்கிழமை வெளியீடு 6- 7 இற்கான விடைகள் வெளிவரும்.** (தொடரும்...)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


1.30 மணி

# கல்வி முரசு

**வெளியீடு 07**


தரப்பட்ட 4 படங்களுள் ஒன்று மாத்திரம் ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

01)





(......................)

02)





(......................)

03)





(......................)

04)





(......................)


05)




(......................)

குறியீடுகளைப் பாவித்துத் தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.




06) =..............................................................
07) =..............................................................
08) =..............................................................
09) =..............................................................
10) =..............................................................

**கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்கு மிகவும் பொருத்தமான தனிச்சொற்களின் இலக்கத்தைத் தெரிந்து பெட்டியினுள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 11) தனது பொருள் எதையும் பிறருக்குக் கொடுக்காதவன் | | 1) நாளேடு |
| 12) கணவனை இழந்தவள் | | 2) உலோபி |
| 13) விலங்குகளைப் பாதுகாக்கும் இடம் | | 3) விதவை |
| 14) ஒவ்வொரு நாளும் வெளிவரும் பத்திரிகை | | 4) சந்தி |
| 15) பல தெருக்கள் ஒன்றாகச் சேருமிடம் / சந்திக்குமிடம் | | 5) சரணாலயம் |

**தரப்பட்ட எண்கள், ஆங்கில எழுத்துக்களை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

D, Q, P, D, J, J, K, 3, 7, 2, 7, S, M, J, 4, D, 3, H, D, 9, C, 5, J, 4, D, S, D, J, J, 7

16) இங்கு எண் 7 எத்தனை முறை காணப்படுகின்றது?
1) 2 2) 3 3) 4


17) வரிசையில் அதிகமாகக் காணப்படுவது எண்களா? எழுத்துக்களா?
1) எண்கள் 2) எழுத்துக்கள் 3) இரண்டும் சமம்

18) அதிகமாகக் காணப்படுவது எது?
1) J 2) D ம் J ம் 3) S


19) வரிசையில் காணப்படும் எழுத்துக்களின் எண்ணிக்கை.
1) 14 2) 9 3) 20

20) வரிசையில் காணப்படும் எண்களின் எண்ணிக்கை.
1) 10 2) 18 3) 6


**கீழே தரப்பட்டுள்ள எண்கோலத்தை விளக்கி விடைதருக.**

21) 



(.........................)

22) 


(.........................)

23) 


(.........................)

24) 


(.......... .........)

25) 




26) உண்மை பேசி உயர்வு அடைவோம்.
1) பொய், தாழ்வு 2) வாய்மை, மேன்மை 3) வாக்கு, தாழ்வு

27) நாம் தினமும கடவுளை வணங்குதல வேண்டும்.
1) நிதமும், வழிபடல், 2) காலை, படித்தல் 3) மாலை, பாடுதல்

28) நந்தவனத்தில பூக்கள பூத்துக் குலுங்கின.
1) தோட்டத்தில், கனிகள், 2) பூங்காவில், மலர்கள் 3) மைதானத்தில், காய்கள்

29) மாலாவின் முகம மகிழ்ச்சியில மலர்ந்தது.
1) வதனம், சந்தோசம் 2) மேனி, பரவசம் 3) உடல், பரவசம்

30) அரசன் பகைவனை வெற்றிகரமாகத் துரத்தியடித்தான்.
1) மன்னன், எதிரியை 2) மக்கள், நண்பனை 3) மனிதன், சிநேகிதனை

**தரப்பட்ட நாட்காட்டியைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கான விடையைத் தெரிந்து கோடிடுக.**

2008 ஆம் ஆண்டு யூலை மாத நாட்காட்டி

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | (17) | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

◯ போயா விடுமுறை

31) ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலைக்கூட்டம் நடைபெறும் எனில், இம்மாதத்தில் நடைபெறும் காலைக் கூட்டங்களின் எண்ணிக்கை யாது?
1) 5 2) 4 3) 31 4) 6

32) மாணவர் மன்றக் கூட்டம் மாதத்தின் கடைசிச் செவ்வாய்க்கிழமை நடைபெறும் எனில் அத்திகதி?
1) 30 2) 25 3) 29 4) 26

33) இம்மாதத்தில் 17ஆம் திகதி எவ்வகையான விடுமுறையாகும்?
1) போயா விடுமுறை 2) சுகவீன விடுமுறை 3) அரச விடுமுறை 4) வர்த்தக விடுமுறை

34) எத்தனை வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை நடைபெற்றுள்ளன?
1) 6 2) 4 3) 7 4) 5

35) இம்மாதத்தில் பாடசாலை நடாத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை?
1) 22 2) 31 3) 20 4) 25

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

36) கடலில் எப்போதும் காணமுடியாதது.
1) மீன்கள் 2) கற்கள் 3) நன்னீர்

37) பாலைவனத்தில் எப்போதும் காணப்படுவது.
1) மணல் 2) சக்தி 3) மரம்

38) ஆமையில் காணப்படுவது.
1) உயிர் 2) வால் 3) ஓடு

39) கடிகாரத்தில் இருப்பது.
1) எண்கள் 2) சில்லு 3) பக்கம்

40) பூக்களில் எப்போதும் இருப்பது.
1) மணம் 2) நிறம் 3) வண்ணத்துப்பூச்சி




மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நவராத்திரி விழாவின் ஒன்பதாம் நாளான நேற்று முன்தினம் வீணை வழிபாட்டு நிகழ்ச்சி நடைபெற்றதைக் காணலாம்.

# "மிஸ்சென்னை அழகி" மர்மமான முறையில் மரணம்

(மும்பை)

மிஸ் சென்னை அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிதுஷி டேஷ் போர்டே மும்பையில் மர்மமான முறையில் மரணமானார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மிஸ் சென்னை அழகிப் போட்டியில் பட்டம் வென்றவர் பிதுஷி. இவர் கேரளாவைச் சேர்ந்த தனது கணவருடன் மும்பை அந்தேரி மேற்குப் பகுதியில் வசித்து வந்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு பிதுஷியின் கணவர் கேதார் வீட்டுக்கு வந்த போது, கதவு பூட்டப்பட்டிருந்தது. இதையடுத்து பலமுறை கோலிங் பெல்லை அழுத்தியும் கதவு திறக்கப்படவில்லை.

இதையடுத்து அவர் தன்னிடமிருந்த இன்னொரு சாவியை வைத்து கதவைத் திறந்து உள்ளே சென்றார். அங்கு அறையில் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அதிர்ந்தார்.

இதையடுத்து உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அங்கு அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.


அவர் கொலை செய்யப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது. அவர் விழுந்து கிடந்த இடம் ஒரு கண்ணாடி மேசை இருந்த இடமாகும். அவருக்கு சர்க்கரை வியாதி இருந்துள்ளது.



எனவே மயக்கமடைந்து கண்ணாடி மேசை மீது விழுந்து அதனால் கண்ணாடி உடைந்து குத்தி அவருக்கு இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இருப்பினும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து தொடர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அவரது கணவரையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

# 29 இந்தியர்களுக்கு மரண தண்டனை



(தானே)

சவுதி அரேபியா உள்ளிட்ட வெளிநாடுகளில், கடந்த 5 ஆண்டுகளில், கொலை மற்றும் போதை பொருள் வழக்குகளில் 29 இந்தியர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிராவில் தானே மாவட்டத்தை சேர்ந்த தகவல் உரிமை ஆர்வலரும் பாஜ பிரமுகருமான ஓம் பிரகாஷ் சர்மா, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வெளியுறவு அமைச்சகத்திடம் பெற்ற தகவலில் இந்த விவரம் கூறப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

பல்வேறு நாடுகளில் கொலை உள்ளிட்ட கிரிமினல் குற்ற வழக்குகளில் மொத்தம் 10,647 இந்தியர்கள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 5 ஆண்டுகளில் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில் 21 இந்தியர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குவைத்தில் 6 பேருக்கும், இந்தோனேஷியா மற்றும் ஈரானில் தலா ஒரு இந்தியருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில், அதிகப்பட்சமாக 27 வழக்குகளில் கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது.

போதை பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2 பேருக்கு தூக்கு விதிக்கப்பட்டது. ஐக்கிய அரபு எமிரேட்டில் அதிகபட்சமாக 4,315 இந்தியர்கள் தண்ட்னை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர்.

வங்கதேசத்தில் 2,008, குவைததில் 1,161, சீனாவில் 673, யேமனில் 429, இங்கிலாந்தில் 426 இந்தியர்கள் சிறையில் உள்ளனர்.

# மத்திய அமைச்சரவையில் 15 புதிய முகங்கள் பிரதமர் மன்மோகன் சிங் முடிவு

(புதுடில்லி)

மத்திய அமைச்சரவையில் 15 புதுமுகங்களை சேர்க்க பிரதமர் மன்மோகன் சிங் முடிவு செய்துள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஆளும் காங்கிரஸ் செய்த விலையேற்றம், ஊழல்களில் சிக்கியது போன்றவை அக்கட்சிகு பெரும் இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

சமீபத்தில், அந்நிய முதலீட்டுக்கு அனுமதி கொடுத்தது தொடர்பாக திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் 6 அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையிலிருந்து விலகியதை அடுத்து பல்வேறு முக்கிய துறைகளுக்கு அமைச்சர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், மத்திய அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் மரணம் அடைந்ததால் மேலும் ஒரு வெற்றிடம் ஏற்பட்டது.

இதற்கிடையே, கூட்டணிக் கட்சிகள் முக்கிய அமைச்சர்கள் பதவியைக் கேட்டு நிர்பந்திப்பதால், எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாமல் மத்திய அரசு குழம்பியுள்ளது.

எனவே, சரியாக செயற்படாத அமைச்சர்களை கட்சிப் பணியாற்ற அனுப்பிவிட்டு புதிய நபர்களை அமைச்சரவையில் சேர்க்க ஆளும் மத்திய அரசான காங்கிரஸ் தலைவர் சோனியா தரப்பு ஆலோசித்து வருகிறது.



அந்த வகையில், 15 புதிய முகங்கள் மத்திய அமைச்சரவையில் சேர்க்க பிரதமர் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியா எங்களுடைய கூட்டாளி பகிரங்கமாக அறிவித்தது சீனா

இந்திய - சீனப் போர் நடந்து அரை நூற்றாண்டுகளை கடந்துள்ள நிலையில் இந்தியா தனது நட்பு நாடு என பகிரங்கமாக சீனா அறிவித்துள்ளது.

கடந்த 1962 ஆம் ஆண்டு நடந்த இந்திய சீனப் போரில் பங்கேற்று உயிர்நீத்த வீரர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கடந்த 20 ஆம் திகதி புதுடில்லியில் நடந்தது.

இந் நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டு உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், இந்நிகழ்ச்சி குறித்து சீனாவின் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ஹாங் லீ, தற்போதைய சூழலில் உலகம் பெரும் மாற்றங்களை சந்தித்து விட்டது.

வேகமாக வளர்ந்து வரும் இந்தியா, சீனா வளர்ச்சிக்கான வாய்ப்புகளை தேடி வருகின்றன.

தற்போதைய சூழலில், சீனா இந்தியாவை ஒரு கூட்டாளியாகத்தான் பார்க்கின்றதே அன்றி எதிரியாகப் பார்க்கவில்லை என்றார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்ற சீனா எப்போதும் தயாராக இருப்பதாகவும் லீ தெரிவித்தார்.




# நடிகை சுபா திடீர் மரணம்

(பெங்களூர்)

அண்மையில் வெளியான "மாலைப் பொழுதின் மயக்கத்திலே" என்ற தமிழ்த் திரைப்படத்தில் நடித்த நடிகை சுபா புட்டேலா (வயது -21) பெங்களூரில் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.

பஞ்சாப் மாநிலம் லூதியானாவைச் சேர்ந்த சுபா, தனது குடும்பத்துடன் பெங்களூரில் வசித்து வந்தார். இரண்டு மாதங்களுக்கு முனபு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்ட சுபாவுக்கு சிறுநீரகப் பிரச்சினை இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் அவருக்கு மஞ்சள் காமாலை நோய் பாதிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்த அவர் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்து

பா.லக்ஷனா



5 வது அகவையில்

தேவன் மில்,
கோப்பாய் சந்தி


# தாக்குதல் தீவிரவாதியின் கருணைமனு நிராகரிப்பு

(மும்பை)

மும்பை தாக்குதல் தீவிரவாதி அஜ்மல் கசாபின் கருணை மனுவை நிராகரிக்கும்படி ஜனாதிபதிக்கு மத்திய உள்துறை அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பாகிஸ்தானை சேர்ந்த 10 தீவிரவாதிகள் மும்பையில் நடத்திய பயங்கர தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தீவிரவாதிகளில் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான். மற்றவர்கள் கொல்லப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த மும்பை சிறப்பு நீதிமன்றம், கசாபுக்கு மரண தண்டனை விதித்தது. இதை மும்பை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தன.

இதையடுத்து, ஜனாதிபதிக்கு கசாப் கருணை மனு அனுப்பினான். இந்த மனுவை முதலில் பரிசீலனை செய்த மகாராஷ்டிரா ஆளுநர், அதை நிராகரித்தார். பின்னர், ஜனாதிபதிக்கு மனு அனுப்பப்பட்டது. ஜனாதிபதி அதை மத்திய அரசுக்கு அனுப்பி கருத்து கேட்டார்.

இதைப் பரிசீலனை செய்த மத்திய உள்துறை அமைச்சகம், மனுவை நிராகரிக்கும்படி ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்துள்ளது. இனி, இந்த கருணை மனு மீது ஜனாதிபதி இறுதி முடிவு எடுப்பார். அவரும் மனுவை நிராகரிப்பார் என்று மத்திய அரசு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி "நான் நலமாக இருக்கிறேன்"

## பிடல் காஸ்ட்ரோ



கியூபா முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ சாவின் விளிம்பில் இருப்பதாக வெளியான செய்திகளுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். தனது நாட்டுக்கு எதிரானவர்கள் தான், இதுபோன்ற செய்தியை பரப்பியுள்ளனர் என்றும அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

கியூபா முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ. அவர் உடல் நலக்குறைவால் அவதிப்பட்டதை தொடர்ந்து, அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். காஸ்ட்ரோ முழு ஓய்வில் உள்ளார்.

இந்நிலையில், கடந்த வாரம் ஸ்பெயின் நாட்டு பத்திரிகையில், பிடல் காஸ்ட்ரோ இறந்து விட்டார் அல்லது இறக்கும் தருவாயில் உள்ளார் என்று செய்தி வெளியானது.

இதனால் கியூபாவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதற்கு மறுப்பு தெரிவித்து, கியூபா அரசு பத்திரிகையில் பிடல் காஸ்ட்ரோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கியூபாவுக்கு எதிரானவர்கள் இதுபோன்ற பொய் செய்தியை பரப்பியுள்ளனர். நான் முழு உடல்நலத்துடன் உள்ளேன்.

எனக்கு பக்கவாதம் தாக்கியுள்ளது. ஆனால், நானே என்னுடைய பணிகளை செய்துக் கொள்ளும் அளவுக்கு உடல்நலததுடன் உள்ளேன். என்னைப்பற்றி தவறான செய்தி பரப்பிய கெட்ட சாத்தான் பறவைகளை பற்றி நான் எண்ணிப்பார்க்கவும் விரும்பவில்லை.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், பிடல் காஸ்ட்ரோ தனது தோட்டத்தில் நடப்பது, சாப்பிடுவது போன்ற காட்சிகளை அப்பத்திரிகை பிரசுரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுத் தேர்தலில் முஷாரப்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடக்க உள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதாக முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 1999-2008 ஆம் ஆண்டு வரை அதிபராகவும், இராணுவ சர்வாதிகாரியாகவும் இருந்தவர் பர்வேஷ முஷாரப், தற்போது நாட்டை விட்டு வெளியேறி லண்டன், துபாய் ஆகிய நகரங்களில் மாறி மாறி வசித்து வருகிறார்.

அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்ற கட்சியை தொடங்கியுள்ள அவர், பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசிர்பூட்டோ கொலை வழக்கில் இன்டர்போல் அமைப்பினால் தலைமறைவு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையில் பாகிஸ்தானில் நடக்கவுள்ள பொதுதேர்தலில், கைபர் பக்துன் ஹவா மாகாணத்தில், சிட்ரால் தொகுதியில் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். இதனை அவரது கட்சியின் மூத்த நிர்வாகி சையீப் கூறியுள்ளார்.

# மெக்சிக்கோவில் கடும் மோதல்; 2 பெண்கள் உட்பட 7 பேர் பலி



மெக்சிக்கோவின் வடக்கில் உள்ள ஜகாடெக்ஸ் மாகாணத்தில் கடற்படையைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கும், மர்மக் கும்பலுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பெண்கள் உட்பட. 7 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து மாகாண அரசு வழக்குரைஞரின் செய்தித் தொடர்பாளர் ஜார்ஜ் புளோரிஸ் தெரிவிக்கையில்,

கடற்படையைச் சேர்ந்த ஒரு பிரிவினருக்கும், மர்மக் கும்பலுக்கும் இடையே 2 மணி நேரம் நடைபெற்ற மோதலில் அந்த கும்பலைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர். எனினும் அவர்களின் சடலங்களை அடையாளம் காண முடியவில்லை என்றார்.

எனினும் இந்த மோதல் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை என அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.

ஜெட்டா இனத்தவர்கள் அதிகம் வசிக்கும் இப்பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது வழக்கம்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு அந்த இனத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவர் கடற்படையினரால் கொல்லப்பட்டார்.

இதற்கு பழிவாங்கும் விதத்தில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## உலகச் செய்திகள்

# எங்களது ஆயுத தொழிற்சாலைமீது இஸ்ரேல்தான் தாக்குதல் நடத்தியது

## சூடான் குற்றச்சாட்டு

(கார்டோ)

எங்களது நாட்டிலுள்ள ஆயுத தொழிற்சாலை மீது இஸ்ரேல் தான் தாக்குதல் நடத்தியது என சூடான் குற்றம் சுமத்தி உள்ளது.

சூடான் தலைநகர் கார்டோமில் ஆயுத தொழிற்சாலை ஒனறு உள்ளது. இத்தொழிற்சாலையின் மீது கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்ட தாக்குதலில் 2 பேர் இறந்தனர்.

இந்நிலையில் 4 இஸ்ரேல் விமானங்கள் தான் எங்கள் ஆயுதத் தொழிற்சாலையின் மீது தாக்குதல் நடத்தியது என கலாசார மற்றும் செய்தித்துறை அமைச்சர் அகமது பிலால் உஸ்மான் தெரிவித்துள்ளார்.

மேலும் இங்கிருந்து பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதாக சந்தேகம் எழுந்ததன் பேரிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜூலியன் அசாஞ்சேக்கு உடல் நலக்குறைவு



அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சே. இதனால் அசாஞ்சே மீது கடும் கோபத்தில் உள்ளது அமெரிக்கா. இந்நிலையில் அசாஞ்சே மீது சுவீடன் அரசு பாலியல் வழக்கை தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக லண டனில் தங்கியிருந்த அசாஞ்சே கடந்த 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

அதன் பின் பிணையில் வந்த இவர் லண்டனில் உள்ள ஈக்வடார தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். தற்போது அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளத ா தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஈக்வடார் வெளிவிவகாரத்துறை துணை அமைச்சர் மார்கோ அல்புஜா மார்டினஸ் கூறுகையில், அசாஞ்சேயின் உடல்நிலை மிக மோசமாக உள்ளது. அவரை மருத்துவமனையில் சேர்த்து உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கு பிரிட்டன் அரசு அனுமதி தரவேண்டும் என்று தெரிவித்தார்.



பல்கேரிய ஜனாதிபதி ரோஷன் பிளவ்நெலிவ் பலஸ்தீனத்தில் உள்ள ரமலா நகருக்கு சென்றபோது அவரை பலஸ்தீன ஜனாதிபதி மகமூது அப்பாஸ் அழைத்துச் செல்வதைக் காணலாம்.

# கனடாவில் விரைவில் இடைத்தேர்தல்

## பிரதமர் அறிவிப்பு



(ரொறன்றோ)

கனடாவின் விக்டோரியா, கேல்கரி மற்றும் ஒண்டோரியா நகரங்களுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடக்க உள்ளதாக பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

விக்டோரியா நகரத்தின் சட்டமன்ற உறுப்பினரான டெனிஸ் சவோயி உடல்நலக் குறைவு காரணமாக தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

கேல்கரி மையத்தின் சட்டமன்ற உறுப்பினரான கன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த லீ ரிசசர்ட்சன் பதவியிலிருந்து விலகிவிட்டார்.

இதே போன்று முன்னாள் கபினட் அமைச்சராக இருந்த பெவ் ஓடா என்ற பெண் அதிகச் செலவுகள் செய்தார் என்ற விமர்சனம் எழுந்ததையடுத்து, டர்ஹாம் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகினார்.

எனவே இந்த மூன்று இடங்களுக்கும் எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளதாக பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்துள்ளார்.

# மியான்மரில் மீண்டும் இனக்கலவரம்

மியான்மர் நாட்டில் கடந்த ஜூன் மாதம் இரு இனத்தினரிடையே பயங்கரக் கலவரம் ஏற்பட்டது.

ஒரு இனத்தைச் சேர்ந்த பெண்ணை மற்றொரு இனத்தினர் வல்லுறவு புரிந்து விட்டதாக பரவிய தகவலை அடுத்து இந்தக் கலவரம் மூண்டது. இதில் 90 பேர் கொல்லப்பட்டனர்.

இதனால் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வங்காள தேசத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர். இதன் பிறகு 2 மாதமாக அமைதி நிலவி வந்தது. இதனால் வங்காள தேசத்தில் தஞ்சம் அடைந்தவர்கள் நாடு திரும்ப தொடங்கினார்கள்.

இந்த நிலையில் அங்கு மீண்டும் இனக்கலவரம் வெடிதது ள்ளது. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

ஆயிரம் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதையடுத்து பல இடங்களிலும் கலவரம் பரவி உள்ளது.

கலவரத்தை தடுகக மின்மயா, மருக்கோ ஆகிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கலவரப் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

# கே.பி. சர்வதேச குற்றவாளி; இன்ரர்போலுக்கு தகவல் கொடுங்கள்

## இப்போதுதான் துயில் எழுகிறார் ஜெயலத்

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட தீவிரவாதி என்று சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் கே.பி. என்ற குமரன் பத்மநாதனின் அனைத்து தகவல்களையும் சர்வதேச பொலிஸாருக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் நான் இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

கடந்த 30 வருடங்களாக பல மனிதப் படுகொலைகளுக்கு காரணமான விடுதலைப் புலி இயக்கத்திற்கு பல்லாயிரம் டொலர்களை சேகரித்தமை, ஆயுதங்களை இவ்வியக்கத்துக்கு விநியோகித்தமை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்ட சண்முகம் குமரன் தர்மலிங்கம் என்ற குமரன் பத்மநாதன் (கே.பி.) என்பவரை சர்வதேச பொலிஸார் கைது செய்யத் தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

தங்களது இணையத்தளத்திலும், பிரசித்த இணையத்தளங்களிலும் இது குறித்து சர்வதேசப் பொலிஸார் தகவல் வெளியிட்டிருப்பதோடு இந்தியா, சென்னையிலுள்ள நீதிமன்றிலும் குமரன் பத்மநாதனைக் கைது செய்ய பிடிவிறாந்து ஒன்றையும் பெற்றுள்ளனர்.


இந்த பிடிவிறாந்தின் பிரதி ஒன்றை கடந்த 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி என்னால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, அவை இலங்கையில் பிரசித்தியும் பெற்றன. நான் இதனை சமர்ப்பிக்கும்போது நாடாளுமன்றில் உயரதிகாரிகளின் பகுதியில் ஜனாதிபதியின் செயலாளர், சட்டமா அதிபர் திணைக்கள மற்றும் பொலிஸ் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகளும் இருந்தனர்.

இலங்கை பொலிஸ் சர்வதேச பொலிஸில் அங்கத்துவம் பெற்றிருக்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் தலைமறைவாயுள்ள இலங்கையில் தேடப்படும் குற்றவாளிகளைச் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் இலங்கைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மிகுந்த தொடர்புகளைப் பேணி வரும் சர்வதேச பொலிஸாரிடம் குமரன் பத்மநாதன் தொடர்பான விபரங்களை இலங்கைப் பொலிஸார் வழங்குவது பொறுப்பாகும்.

குமரன் பத்மநாதன் தொடர்பான தகவல்கள் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஜெனரல் லக்ஷ்மன் ஹுலுகல்ல மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகிய இருவரும் நடத்திய ஊடக மாநாட்டின்போது கே.பி. தொடர்பில் பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி குமரன் பத்மநாதன் தொடர்பான தகவல்கள் அனைத்தும் மிகக்கூடிய விரைவில் சர்வதேச பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். சர்வதேச பொலிஸாரின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.interpol.int என்பதில் அவர்களது மின்னஞ்சல் உள்ளிட்ட அனைத்தும் உள்ளன. இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# வாழ்வின் எழுச்சி வலி.மேற்கில் உற்சாகம்



செழிப்பானதொரு வீட்டுத்தோட்டத்தின் உரிமையாளராகுங்கள் வாழ்வின் எழுச்சியுடன் நீங்களும் சேருங்கள் என்ற தொனிப் பொருளில் மகிந்தசிந்தனையின் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) வீட்டுத்தோட்டச் செய்கையின் நான்காம் கட்ட விதைகள் மற்றும் பயிர்கள் பயிரிடும் ஆரம்ப நிகழ்வு நேற்று அராலியில் இடம்பெற்றது.

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/162 அராலி தெற்கு கிராமஅலுவலர் பிரிவில் கிராம அலுவலர் து.சுபேஸ் தலைமையில் விதை நடும் வைபவம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் அமைப்பாளரும், ஈ.பி.டி.பி.யின் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) இயற்கை பசளையை பாவித்து வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதன் ஊடாக மக்கள் நோயின்றி ஆரோக்கியமான சமுதாயமாக வாழமுடியுமென்பதுடன், இவ்வாறான திட்டங்கள் கிடைக்கும் போது மக்கள் சரிவரப் பயன்படுத்தி வாழ்வாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர், சமுர்த்தி உத்தியோகத்தர், சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள், பொதுமக்கள், கிராம அலுவலர், வலி.மேற்கு பிரதேச சபையின் கூட்டமைப்பு உறுப்பினரான ஐயலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல சுழிபுரத்தில் நடைபெற்ற திவிநெகும வைபவத்திலும் கூட்டமைப்பு உறுப்பினரான சிவரஞ்சன் கலந்து கொண்டார். கூட்டமைப்பினரே திவிநெகும திட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில்....

யும் புனரமைத்துத்தர முன்வரவேண்டும் என்றும் சீனத்தூதுவரிடம் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளார்.

மேலும் சீன அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு மக்கள் சார்பாக நன்றிகளை அரச அதிபர் சீனத்தூதருக்குத் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபரின் கோரிக்கைக்குப் பதிலளித்த சீனத்தூதுவர் தம்மால் இயன்ற வரை இந்த வீதி அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்பொருட்டே தனது விஜயம் அமைந்துள்ளதாகவும் தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து உள்ளூர் வீதிகளைப் புனரமைத்துத் தருவது குறித்து சீனா அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்ததாக யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏ-9 வீதி வழியாக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சீனத்தூதுவர் சீன அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டார்.

அத்துடன் முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.மாநகர சபைக்கும், யாழ்.நூல் நிலையத்திற்கும் விஜயம் செய்த சீனத்தூதுவர் அங்கு பல பகுதிகளையும் சுற்றிப் பார்வையிட்டுள்ளார்.


பிற்பகல் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும், வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கும் விஜயம் செய்துள்ளார். (பா)

## பிரிட்டனுக்கான...

இலங்கையர்களின் விசா விண்ணப்பங்களில் அநேகமானவை 2008 இலிருந்து சென்னையிலேயே பரிசீலனை செய்யப்பட்டன. இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானி கராலயத்தின் விசா பிரிவு ஒக்டோபர் 31 ஆம் திகதியுடன் மூடப்படும். விசா விண்ணப்பங்களை முன்னர் போலவே விசா விண்ணப்ப நிலையத்திலேயே ஒப்படைக்கலாம். 90 சதவீத விசா விண்ணப்பங்கள் 15 நாட்களுக்குள் பரிசீலிக்கப்படும்.

கடவுச்சீட்டை இலங்கைக்கு வெளியே கொண்டு செல்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆயிரம் ரூபாவை விசா விண்ணப்ப நிலையத்தில் செலுத்த முடியும். விசா விண்ணப்ப நிலைய நிர்வாக செலவாக 200 ரூபா அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, தொலைபேசியூடாக - 331 (டயலொக் பாவனையாளர்களுக்கு) 0094 773908011 உடன் தொடர்பு கொள்ளவும். அல்லது, Chennai.visae nquiry@ fco.gov.uk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல்களை அனுப்பியோ அல்லது www.vfs-uk-lk.com; www.ukba.homeoffice.gov.uk> www.ukba.homeoffice.gov.uk/countries/srilanka என்ற இணையத்தளங்களினூடாகவோ தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்டனியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

## வடமாகாண...

பின்னர் வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை கொண்டு வர முடியாதிருப்பதாலும் எதுவும் கூற முடியாத நிலையிலுள்ள அரசாங்கம் தேசப்பற்று மற்றும் இனவாதம் என்பவற்றை மூட்டிவிட முயல்கின்றது.

13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு இடம்பெறும் என இந்த அரசாங்கம்தான் கூறியது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸில் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது அரசாங்கம் இந்த உறுதிமொழியை அளித்தது. ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை வந்தபோதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்னா இலங்கை வந்தபோதும் அரசாங்கம் இதையே கூறியது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் மூனும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் கிருஷ்ணாவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

இந்த நிலைமையில் 13 ஆவது திருத்தத்தை இரத்து செய்ய முயல்வது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என அவர் கூறினார்.

## முடங்கியது...

தெரிவித்தனர். அவசர சிகிச்சைப்பிரிவு தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரிவுகளுக்கும் வைத்தியர்கள் சமூகமளிக்காமையினால், வைத்தியசேவை பாதிக்கப்பட்டுள்ளதுடன் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக வந்த நோயாளர்கள் சிகிச்சைபெற முடியாமல் திரும்பிச் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, நாடு முழுவதிலும் நேற்று வைத்தியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வு.......

னைக்கான தீர்வு பற்றிக் கலந்துரையாடவும் அது தொடர்பில் சரியான முடிவுகள் எடுக்கவும் உகந்த இடம் நாடாளுமன்றம் தான் என்பதே அரசின் நிலைப்பாடு.

மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து எடுக்கும் தீர்வு எதுவானாலும் அதனை அரசாங்கம் ஏற்று செயற்படும் என்பதை ஜனாதிபதி மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அடிக்கடி இந்தியா சென்று வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்ள தயக்கம் காட்டுகின்றனர். எனவே தேசிய பிரச்சினைக்கான தீர்வு இழுத்தடிக்கப்பட அவர்கள்தான் காரணம்.

இதே நிலை தொடர்ந்தால் தேசிய பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கமே முன் வைக்கும். எனினும் அதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை எனவும் அமைச்சர் கூறினார். அத்துடன் 13 ஆவது திருத்தத்தை அரசியல் அமைப்பில் இருந்து நீக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் 13 பிளஸ் என்பது மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு செனட் சபைபோன்ற ஒரு சபையினை உருவாக்கி அதன் மூலம் சகல மக்களின் விருப்புக்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வை முன்வைத்தலாகும் என்று இலங்கை ஜனாதிபதி இந்திய விஜயத்தின் போது இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# வீடமைப்புப் பணிக்கு இடையூறு

## வடமராட்சி கிழக்கு மக்களுக்குச் சோதனை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வத்திராயன் கிராமத்தில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் 125 வீடுகள் அமைக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 18 ஆம் திகதியன்று அவ்வீடுகளை மேற்பார்வை செய்துவரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு இனந்தெரியாத நபர் தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்ததை அடுத்து உடனடியாக வத்திராயன் வீட்டுத்திட்டப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் கடந்த 23 ஆம் திகதி நேரடியாகக் கிராமத்திற்கு விஜயம் செய்து வீட்டுப் பயனாளிகள் 125 பேரையும் அவர்களுடன் பொது மக்களையும் அழைத்துக் கலந்துரையாடலை மேற்கொண்டு முறைப்பாடுகளைத் தெரிவித்து வீட்டுத்திட்டப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்துவதாகத் தெரிவித்தார்.

ஒன்றுகூடிய மக்களால் தாம் இந்த அச்சுறுத்தலை விடுவிக்கவில்லை என்றும் யாரோ ஒருவர் கூறியதற்காக எமது வீட்டுத்திட்டப் பணிகளை நிறுத்துவது நியாயமில்லை என்றும் தமக்கான வீடுகள் கட்டி வழங்கப்பட வேண்டும எனவும் மக்கள் கேட்டுக்கொண்டனர். அதன் பிறகு உத்தியோகத்தருக்கு மக்களாகிய நீங்கள் பாதுகாப்புத் தரவேண்டும் என்று கோரியதை அடுத்து மக்கள் பூரண ஆதரவுடன் நேற்று முன்தினம் வீட்டுத்திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் திரும்பவும் நேற்று முன்தினம் அதே இனந்தெரியாத நபர் மீண்டும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ். தலைமை அலுவலகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதே தொழில்நுட்ப உத்தியோகத்தருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார்.

இதனை அடுத்து உடனடியாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டதுடன் வீட்டுத்திட்டப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

கிராமத்தில் மக்களுக்கு வீடு கட்டப்படுவதை விரும்பாத இனந்தெரியாத் புல்லுருவிகள் இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்நபரை உடனடியாக அடையாளம் கண்டு கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதுடன் அவரை மக்களுக்கு இனங்காட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனத்தில் எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (38)

# மன்னார் நீதிமன்றத் தாக்குதல்; 16 பேர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் தொடர்பில் கைது செயயப்பட்ட சந்தேக நபர்களில் 16 பேர் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மேலதிக நீதவான் ஆர்.திசநாயக்க முன்னிலையில் குறித்த சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போதே பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டது. இந்த 16 சந்தேகநபர்களும் தலா 10,000 ரூபா ரொக்க பிணையிலும் தலா 500,000 ரூபா சரீரப் பிணையிலுமே மன்னார் மேலதிக நீதவானால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த ஜுலை 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் 43 பேர் சநதேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஆறு பேர் மன்னார் மேல் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸினால் ஒக்ரோபர் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, நீதிமன்றத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் 21 சந்தேக நபர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# எரிபொருளின் விலை அதிகரிக்குமா?

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் வெகு விரைவில் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் வாரங்களில் எரிபொருட்கள் மற்றும் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஈரான் லைட் என்ற மசகு எண்ணெய் கிடைக்கப் பெறாமையே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த நிலையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# கணினியில் தரவுகளை அழித்த இறைவரித் திணைக்கள அதிகாரி கைது

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலுள்ள பல கணினிகளில் சேகரித்துவைக்கப்பட்ட தரவுகளை அழித்தமை உள்ளிட்ட பல்வேறு மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் அத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கணினிகளில் தரவுகள் காணாமல் போனமை கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவில் செய்த முறைப்பாட்டையடுத்து இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இதனால் இத்திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் இன்னமும் மதிப்பிடப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மினுவாங்கொடை மற்றும் பாணந்துறையைச் சேர்ந்த வரி அதிகாரி, தகவல் நிரைப்படுத்தல் அதிகாரி ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். தடுத்துவைக்கப்பட்டுள்ள இச்சந்தேக நபர்கள் விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

நீண்டகாலமாகவிருந்து இவர்கள் முக்கியமான தரவுகளை அழித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தரவுகளை அழிக்குமாறு இவர்களைத் தூண்டியவர்கள் யாரென இதுவரையில் கண்டறியப்படவில்லையெனப் பொலிஸார் கூறினர். இம்மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர்களோ, வர்த்தக நிறுவனங்களோ அடுத்த சில வாரங்களில் கண்டுபிடிக்கப்படுமெனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள இவ்விரு சந்தேக நபர்களூடாக திணைக்களத்தினுள் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடும் ஏனையவர்களை கண்டுபிடிக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

# வாழ்வுக்கு உற்சாகமூட்டும் 'வாழ்வின் எழுச்சி' ஆரம்பம்

திவிநெகும வாழ்வெளிச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நான்காம் கட்ட உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் சங்கிலியன் மன்ற மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த வாழ்வெளிச்சித்திட்டத்தின் கீழ் காஸ்அடுப்பு, சிலிண்டர், புட்டுப்பானை மற்றும் அலுமினியப் பொருட்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன் வீட்டுப் பயிர்ச்செய்கைக்கான விதைகளும் வழங்கப்பட்டதுடன், நல்லூர் சங்கிலியன் மன்ற மண்டபத்திற்கு முன்பாக விதைகள் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிராம அலுவலர்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# வேலைக்கான சம்பளம் வழங்காததால் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தில் முறுகல்

நிலக்கண்ணி வெடி அகற்றும் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் வவுனியா அலுவலகத்தின் மீது அதன் ஊழியர்கள் நடத்திய கல்வீச்சுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் குறித்த அலுவலகமும் சேதமடைந்துள்ளது.

குறித்த அலுவலகத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை எனவும் இதைக் கேட்கச் சென்ற இவர்கள் மீது அலுவலக ஊழியர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் இதனையடுத்தே தாங்கள் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாக தாக்குதல் நடத்திய ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மேற்படி அலுவலகத்தின் முகாமையாளர், நிதிப் பற்றாக்குறை காரணமாகவே சம்பளம் வழங்க முடியாது போனதாகவும் மிக விரைவில் உரிய சம்பள நிலுவையை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அலுவலகம் மீது நடத்தப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலால் குறித்த அலுவலகம் சேதமடைந்துள்ள நிலையில் வவுனியா பொலிஸில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலதிபர் வெட்டிக்கொலை

(கொழும்பு)

காலிப் பிரதேசத்தை சேர்ந்த பிரபல தொழிலதிபர் நேற்று வியாழக்கிழமை காலை காலி நகரில் வைத்து வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். காலி, பிடதெனிய பிரதேசத்தைச் சேர்நத 48 வயதானவரே வெட்டிக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது நான்கு பேரைக் கொண்ட ஆயுதக் குழுவினரால் வழி மறித்து வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். வாள் வெட்டுக்குள்ளான குறித்த நபர் பாரிய காயங்களுடன் கை மற்றும் கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வீதியில் கிடந்தார்.

காலி மாநகர சபையின் அம்பியுலன்ஸ் சேவை மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இவர் இறந்துவிட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களின் கட்டமைப்பு மற்று இணைப்பு வேலைகளுக்காகவும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, தலங்காவில்ப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி, குருநகர், பாசையூரின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி, யாழ். மாநகர சபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, நாச்சிமார் கோவிலடி முதல தட்டார்தெரு ஊடாக மனோகராத் தியேட்டர் வரையான பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, மண்டான், புறாப்பொறுக்கி, குஞ்சர்கடை ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு, உடுப்பிட்டி, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், சுன்னாகம், மல்லாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, தெல்லிப்பழை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்ச்சிபுரம், காக்கைதீவு, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர், பிரதான வீதி, கொன்வன் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், அர்ாலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

29.10.2012 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் பிறவுன் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டார் தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, மண்டான், புறாப்பொறுக்கி, குஞ்சர்கடை ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமனாறு, உடுப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை ஆகிய இடங்களிலும்,

26.10.2012 வெள்ளிக்கிழமை, 30.10.2012 செவ்வாய்க் கிழமை மற்றும் 01.11.2012 வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்மந்தர் கடைப் பிரதேசம், துன்னாலை, குடவத்தைப் பிரதேசம், யாக்கருப் பிரதேசம், கிழவிதோட்டம் ஆகிய இடங்களிலும்,

29.10.2012 திங்கட்கிழமை, 31.10.2012 புதன் கிழமை மற்றும் 02.11.2012 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அளவெட்டி, மல்லாகம் ஒரு பகுதி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான், விளான், அம்பனை ஆகிய இடங்களிலும், 26.10.2012 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.